www.padippakam.com

# தென்றல்

வெளியீடு: 1-9-87




அன்பளிப்பு மூன்று மட்டுமே

: யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறு :

படிப்பகம்

www.padippakam.com

# R·M·L

தரமான திரைப்பட வீடியோ-
-கசெட்டுகளை நாளாந்த, வாராந்த
தவணைமுறையில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்!

**ROTA MOVIE LAND**

முகவரி:

R. M. L
BLUMENDELLER-STR-31
4330, MÜLHEIM-RUHR
WEST GERMANY

T.P No: 0208- 497667

படிப்பகம்

www.padippakam.com

மலர் 13 1-9-87



அவனன்றி ஓரணுவும் அசையாது

# எமது உள்ளத்திலிருந்து-----

அன்பும் பண்பும் மிக்க வாசகர்களே!

தென்றல் இன்று தன் ஒருவருடத்தைப் பூர்த்தி செய்த---- தன் சொந்தக் காலிலேயே---- நிற்க வேண்டிய ஒரு சிறுமி ஆகிவிட்டாள். இதனால்---- அவளுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்கள் ஏராளம். இதை எமது வாசக நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இருந்தபோதும்--- அவள் உறுதி தளராது தன் பாதையில்--- இலட்சிய வேட்கையுடன் நடைபோடுகிறாள். அதற்கு அவளது வாசக, எழுத்தாள நண்பர்களைத்தான் காரணமாகக் கூறவேண்டும்.

மேலும், அவளால் அதிக தூரம் நடக்கமுடியாது. அதனால் அவள் தனக்கென ஒரு வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு---- முக்கியமாகச் சந்தா தாரர்களுக்காக --- இனி வரும் காலங்களில் இயங்கி வருவாள். மேலும் தபால் செலவு அதிகரித்த காரணத்தினாலும், அவள் உருவம் பெறும் செலவு அதிகரித்தமையாலும் ஐந்து மாதத்திற்குரிய சந்தாவாக சஞ்சிகையின் ஐந்து மாதத்திற்குரிய அன்பளிப்பையும் தபாற் செலவாக ஐந்து மார்க்கையும் சேர்த்து அனுப்பும்படி வாசக அன்பர்களிடம் அன்பு வேண்டு-

www.padippakam.com

கொள் விழைகிறேன். ஏற்கனவே ஆறுமாதத்திற்குரிய சந்தா ---- இப்போது ஐந்து மாதத்திற்குரியதாக மாற்றம் கண்டுள்ளது. தென்றல் அவள் அன்பு வாசகர்களின் ஆதரவை நாடி நிற்கிறாள். அவள் வாழ்வில் தொடர்ந்து நடை போடுவதும் --------- எல்லாம் வாசகர்களின் கையில்தான் என்பதைத் தெளிவாக்க விரும்புகிறோம். ஆதரவு இருந்தால் --- தென்றல் மாதந்தவறாது உங்களை நாடிவருவாள். இல்லையேல் --- அவள் மீது அதிக அக்கறை ஏன் --- ஒரு பைத்தியகாரத்தனமான அன்பு பாசம் கொண்டுள்ள இனிய வாசகர்களுக்குத் தனது ---- இயலாமையை வேதனையுடன் தெரிவித்துக் கொண்டு அவர்களுக்கு ஆசிகூறி அவள் விடை பெற்று விடுவாள்.

அவளது ---- எதிர்காலம் வாசகர்களாகிய உங்கள் கையில்தான். நன்கு சிந்தித்து முடிவெடுங்கள். அவள் உங்களை வற்புறுத்தவில்லை. மனமகிழ்ச்சியுடன் நல்கும் இதயபூர்வமான உங்கள் ஆதரவைத்தான் வேண்டி நிற்கிறாள்.


நன்றி.

வணக்கம்.

வாழ்க வாசகர்கள்!

வாழ்க தென்றல்!

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com

# தென்றலே உன்னை வாழ்த்துகிறேன்

அன்பே... உன் இதயத்தில் என் கற்பனைகள் அரங்கேறுதே
என் மனதின் ஏக்கங்கள் எண்ணற்ற சிந்தனைகள் –
இன்று உனக்காக இங்கு பூத்ததுவே!
உன் எழில் கண்டு நான் வியக்கிறேன்.
என் விழியில் என்றும் நீயே நிறைந்திருப்பாய்.
முத்துக்கள் நயமும் முல்லைச்சரச் சிரிப்பும்
மூன்று தமிழ்ச் சொந்தாகத் துள்ளிவரும் இளநடையும்
அள்ளிவரும் பெண்ணே செந்தமிழ்ச் செல்வியே!
மகளே உனக்காக வரைகின்றேன் பொன்னுளாகச் சொல்லி
கலைமகளென அடியெடுத்து புது மனைகளில் உனை அழைத்
புதுக் கவிதைகள் பாட ஜேர்மனியில் வந்தாயே.
தென்றலெனும் தமிழ்ச் செல்வியே உனக்கு நல்வாழ்த்துக்
பலகோடி நூறாண்டுகள் நீ வாழ வேண்டுமம்மா.
தமிழ் அன்னை மொழி சொல்லி இங்குவந்ததே கலைவெல்ல
எங்கள் மலரான "தென்றல்"
ஜேர்மன் தேசத்தில் கருவாகித் தன் பங்கைப் பரிமாறுகிறாள்
சிந்து கவிபாடும் அழகோடு உங்கள் இல்லத்தில் உறவா
உண்மை அன்பாலே அணைபோட – தென்றலவள்
புத்தாண்டு கண்ட மலராகப் புதுமைகள்பல சொல்வாளே

— யாழ்ப்பாணன்.



www.padippakam.com

# சிந்தனைக்கு.



## விதியென்று ஒன்றுண்டா?

விதியென்று ஒன்றுண்டா என்றால்---- 'ஆமாம்' என்கின்றனர் சிலர். இல்லையென வாதிக்கின்றனர் மேலும் சிலர். விதியை மதியால் வெல்லலாமென்று உடனே சாவித்திரி சத்தியவான் கதையைத் தொடங்கிவிடுவர் விதிக்கு எதிரானவர்கள். அப்படி சாவித்திரி தன் கணவன் உயிரை மீட்டாள் என்பதும் விதிதான் என்பர் அவர்களை வென்றுவிட்டோம் என நினைக்கும் மதியின் தோழர்கள். விதியென்றும், நியதி அல்லது பிராப்தம் என்றும் அடிக்கடி சொல்லிக் கொள்பவர்கள்தான் எம்மத்தியில் வாழ்கின்றனர். இதனை சற்று மனோதத்துவ ரீதியில் பார்ப்போமானால் இப்படியானவர்கள் பொதுவாகப் பலவீனமானவர்களாகவும், விரக்தியில் வாழ்பவர்களாகவுமே காணப்படுகின்றனர். ஆரோக்கியமான ஒரு வாழ்க்கை வாழ விரும்புபவர்கள் இந்த விதியை சற்று மறப்பது, நியதியை சற்று ஒதுக்கிவைப்பது நல்லது. நான் விதிக்கு எதிரியல்ல. அதேவேளை மதிக்கு மந்திரியும் அல்ல. ஆனால்--- விதியென்ற ஒன்று உண்டா? என்று கேட்பதையோ. அல்லது அதை நினைத்து வாழ்வதையோ--- சற்று ஒதுக்கி வாழ்ந்தால் நாம்---- இன்னும் கொஞ்சம் ஆக்கபூர்வமாகவும்---- ஒரு ஆரோக்கியமான-- ---- உற்சாகமான வாழ்க்கையை வாழலாம் என்பதுதான் மெய் ✦

படிப்பகம்

www.padippakam.com

# இறைவன் கவனம் உன்பால்

- திருமதி. கோசல்யா. சொர்ணலிங்கம்

பட்டுப்பசுந்தரைமீது படுத்துறங்கும் வேளை
மொட்டென நறுமலர்கள் மோதிச் செல்லும் வேளை
சிட்டுக் குருவியென மனம் தெவிட்டாத் துள்ளிப்பில் தோய-
குட்டை இருந்ததைக் காணோம்- கொத்தியபின் பாம்பெ
னக் கண்டோம்!

சிரித்துப் பேசி மனச் சிறையில் பூட்டிக் கொண்டு
வரிந்து இடம் பற்றி மனிதர் வசதி பலவும் பெற்று
விரித்த சுயநல வலையில் வீழ்ந்தோமென விளங்கும் நேர[ம்]
கரித்த நாகமாகி- விஷத்தை கக்கிப் போச்சு!

எண்ணி மனம் வெதும்பி இதயம் சுக்கு நூறாய்----
புண்ணியாத்மா மீது புழுதி வாரிவிட்டார்- இந்த
கண்ணியமற்ற கயவர் காலை வாரிவிட்ட கதை...
மண்ணில் மறையும் வரையும் - மறக்கும் காலம் வருமே

கள்ளமறியா உள்ளம் கபடமறியாக் கரங்கள்
உண்மை அன்பைத் தேடி உதவும் நெஞ்சம்
பள்ளமறியா பாதம் பதித்ததாலே - இன்று
கொள்ளை போச்சு - அமைதி கொடுமை பலவும் கண்ணெ

பட்டபின் வருமே படித்தறிந்த போதும்
தொட்ட பின்பே சுடும் தீயை வெட்டிவிட்ட போதும்
தட்டிக் கேட்பாரில்லையெனத் தானும் போடும் மனித[ன்]
எட்டி இருந்து பார்க்கும் - இறைவன் கவனம் உன்பால்

www.padippakam.com

-சிறுகதை-

# இவைகளும் சந்திச்சுவடுகள்.....??

-சங்கர் புஷ்பா-

"வெள்ளைக்காறியெண்டாலும் பரவாயில்லை...... இவன் ஆபிரிக்க கறுப்பியோடயெல்லே திரியிறான்"......

"அதுகளின்ர நிறத்தையும் உருவத்தையும் பார்க்க ----- எப்பிடித்தான் மனம் வந்துதாக்கும்" ----

"உதுகள் உந்த கறுப்பு ஆபிரிக்கசனமெல்லாம் பஞ்சம் பசியிலதான் இஞ்ச அள்ளுப்பட்டு வந்த-துகள்" -----

ஒரு மண்ணில் பிறந்துவிட்ட காரணமோ என்னவோ இலங்கையர் சிலரின், காற்றில் வந்த கதையளப்புக்கள் -----

மனம் தனக்குள் சிரித்துக் கொண்டாலும் ---- நெஞ்சை கைகளால் பிசைவதுபோல ----

மேற்குக் காற்றால் இவர்களின் சுவாசப்பைகளைத்தானே தொட முடிகின்றது..... வக்கிரப்பட்ட சிந்தனைகளை ----??

வீட்டுக் கடிதம் ---- தேவிரீச்சரின் கடிதம் ---- எல்லாவற்றிற்கும் பதில் எழுத வேண்டும். இந்தக் கிழமை முழுக்கப் போட்ட உடுப்புக்கள் வேறு நிறைந்து போய் ----

குளித்துவிட்டு, தோய்ப்பமென்றெண்ணிக் கொண்டு மாது குளித்துக் கொண்டிருந்தாள். குளிர்ந்த நீரிலும் அடங்காத

www.padippakam.com




அடர்த்தியாகச் சுருண்ட மயிர்களை உயர்த்தி
அழகாக "ரிபன்" பண்ணிவிட்டு, மாநிறத்தில்
அகன்றிருக்கும் முகத்தில் அழகாகச் சிரிக்கும்
அந்த மலர்விழிகள் ------

உஷ்ணமாக அந்த நினைவுகள்------ மனம் சிரித்து சமாதானம் செய்தாலும் காற்று வாக்கில் வந்து விழுந்த அந்த நரம்பற்றவர்களின்--- நாவுகுட்டலுகள்---

நெருப்புக் குழம்புபோல் மனதில்---ஓடி---ஓடி---

சீ--- எளியநாயன் மனம் கிலேசமாய் கருகிக்கொள்கிறது.

தனக்கு கீழுள்ளவன், தன்போலுள்ளவன் என்றால்--- ஏறிமிதித்து உழக்குவதும், கொஞ்சம் தேவையானவன் என்றால் தலைக்கு மேலே வைத்து சேவகம் செய்கிறதும் சந்ததி சந்ததியாய் மாறாமல்----

அடுத்தவன் என்ன செய்கிறான்--- அடுத்த வீட்டில் என்ன பிரச்சனை என்று காதைக் கூர்மையாக்கி, கிடைத்ததை கயிறாகத் திரிக்கும் செய்படிகளும்--- தன்னைப் பற்றி கொஞ்சமும் சிந்திக்காமல் அடுத்தவனை விமர்சனம் செய்யும் அழுக்கான மனவோட்டங்களும்-----

வெள்ளைக்காரன் எங்களை மதிக்கிறான் இல்லையென்று சிலர் சொல்லியழுகிறார்களாம்---!!

தன்ரை மண்ணில் பிறந்து--- தன்னைப்போல வாழுறவனை மேல்சாதி--- கீழ்சாதி---என்று அடிமைத்தனம் செய்யும் மனிதப் பண்பில்லாதவர்களையெல்லாம்----

வெள்ளைக்காரன் மதிக்கவேண்டுமாம்---??

கௌரவிக்கப்பட வேண்டுமாம்---??

இதெல்லாம் நியாயமான எதிர்பார்ப்பா---??

"டொயிலற்" சுவருக்கு ஒட்டப்பட்டிருந்த "பப்பியர்" எல்லாம் கிழிந்து அழுக்கேறி--- அசிங்கமாய்----

www.padippakam.com

பார்க்க கோரமாய் --- சலிப்பாய் -----
மனம் அழுத்துங் கொள்கின்றது.

இருக்கும் இடத்தை மனித வீடாக மாற்றுவதற்கு ஒரு செப்பு- பெணிக்கை கூட இழக்க விரும்பாத மனங்கள் ------

"வீடியோ"... "ரேப்"... "சினிமா" --- இதுதான் உலகமென்று -----

பொருந்தாத மனங்களுடன் தொடருகின்ற நரகங்கள் ------

" மச்சான் குளிச்சு முடிஞ்சுதா"

"டொயிலெட்" கதவை கிக்கி தட்டுகின்ற சத்தம் இலேசாகக் கேட்கிறது.

x x x

நானா -----

சுமார் ஆறுமாதத்திற்கு முன்னர் "வைன் வப்பிறிக்கில்" அவன் புதிதாக வேலைக்கு சேர்ந்தபொழுது ----

நிறத்தால், நிலைமையால் ஒற்றுமை- யானவர்கள் என்ற விதத்தில் துளிர்விட்ட அந்த அறிமுகச் சிரிப்பு ---

"பவுஸ"வுக்கு ஒரு மேசையில் இருந்து சாப்பிடும் வரை வளர்ந்து ----

தங்கள் கஷ்டங்களை கவலைகளை மனந்திறந்து சுயாதீனமாகப் பரிமாறி சுகம் பெறும் அந்த நிலைக்கு முதிர்ச்சி பெற்ற பொழுதுதான் ----

மாது அவனைப் புரிந்துகொள்ள ஆரம்பித்தான்

படிப்பகம்

www.padippakam.com

அவள் எதியோப்பிய விமோம் பல்கலைக் கழக தாவரவியல் இரண்டாம் வருட மாணவி...

எரித்திரிய மகளிர் படைப்பிரிவுக்கு, ஆதரவாக செயல்பட்டமை நிரூபிக்கப்பட்டமையால் நாடு கடக்க வேண்டியதாயிற்று......

அடர்த்தியாக சுருண்ட மயிர்களை உயர்த்தி அழகாக "ரிபன்" பண்ணிவிட்டு, மாநிறத்தில் அகன்றிருக்கும் முகத்தில் அழகாக சிரிக்கும் அந்த மலர்விழிகள் ----

ஒவ்வொரு வேலையையும் ஆர்வமாய், தூய்மையாய் செய்வதில் உள்ள சுறுசுறுப்பு----

சரளமான "டொச்சில்" மணம் விட்டு அவள் கூறிய கதைகள்----! சின்னச்சின்ன விருப்பு வெறுப்புக்கள் முதல் வாழ்க்கைபற்றிய தனது பார்வைகள் வரை அவள் ஒளிவு மறைவற்றுச் சொல்லும் அந்த வெளிப்படை ------ "பொலிற்றிக்ஸ் வெவ்ஸ்" முதல் "நியூஸ்விக்" வரை அவர்கள் போட்டிபோட்டு நடாத்தும் விமர்சனப் பரிமாறல்கள்-----

அந்த பரஸ்பரம் புரிந்துணர்வுடனான நெஞ்சம் இருவரையும் நெருங்க வைத்தது......

அந்தத் தூய நட்பை யார்யாரோ காதலென்றும் ---- இன்னும் சிலர் அதற்கு அடுத்தபடியென்றும் ----

ஆனால் அவர்கள் அதைக் கருத்தில் எடுக்கவேயில்லை.

மாதுவுக்கு அந்த ஆத்மார்த்த

நட்புக் கிடைத்ததில் நிறைய சந்தோசம் இருந்தது---
வெளியில் சென்றால் "வின்ரறும்"----
"சமறும்" மனதில் ஒட்டிப் போகாத சூழ்நிலையும்---
"றாக்கு" வந்தால் போட்டி போடும் "ரெப்ரெக்-
கோடர்களின்" அலறல்களும்--- சாமம் சாமமாய்
கேட்கும் சினிமாச் சரக்குகளின் குமட்டல்களுமாய்---
மனதில் வாந்தியெடுத்துக் கொண்டு-
இந்த பொழுதுகள் மாறி--- மனதுக்குள் மகிழ்ச்-
சிகள் சின்னதாய்ப் பூத்தது----
பொழுதுகள் சங்கீதம் பாடத்தொடங்கின--

x x x x x

பெரியம்மாவின் அக்காதான் "ஸ்வீட் கோட்டில்"
இருந்து ரெலிபோனில் கதைத்தா---
"வீட்டால் கடிதம் வந்தது" என்று சொல்லிவிட்டு
எதையோ சொல்லத் தயங்கும் அந்த அவளின்ரை
வார்த்தைகளில் நெளிவு---
"என்ன ஒளிக்கிறியள் சொல்லுங்கோ அக்கா"
மாதுவின் வார்த்தைகள் வற்புறுத்தல்களாய்---
"நீ--- உங்க ஆபிரிக்க பெட்டையொண்டை
கட்டியிருக்கிறதாம்--- பெட்டையின்ரை படு-
மணிப்பு உன்னோட இருக்கிறவர்கள் ஆரோ
உங்கட வீட்டுக்குக் கடிதம் போட்டவங்களாம்.
--- அதால"----
"என்னக்கா---?" அவசரமாய் மாதுவின் இரண்
"கொய்யாவுக்கு இரண்டாம் முறையும்" செவ்வெல்
வந்து---- கொய்யா----?

www.padippakam.com

# மரணித்த உறவுகள் -

~ அம்பலவன் புவனேந்திரன்..

நான் உனக்காக எழுதிய
பாட்டுக்கள் எப்போதோ
பட்டுப்போய் விட்டனவே...
இப்போது, நான் கூடப்
பட்டுப் போய்விட்டேன்...
உன் கண்ணீரை வார்த்து
என்னைத் துளிர்க்க வைக்கத் துடிக்கிறாயா...?
பட்ட மரத்தில் எப்போதாவது
பசுமை படர்ந்ததுண்டா...?

தண்ணீரில் விழுந்து நான்
தத்தளித்தபோது - இந்தக்
கண்ணீரைக் காணவில்லையே...
துடிப்பாய் - என எண்ணினேன் - நீ
நடிக்கவுமில்லையே...
இதயத்தில் ஈரமில்லாத உன் கண்களில்
இப்போது கண்ணீரா...?

இதயத்தில் வழிந்த
உதிரத்தில் வடித்து
உருவான கவிதைகளை...
நீயும் கண்ணீரால் கடிதமெழுதி
கவிதைகளைக் கரைக்கப் பார்க்கிறாய்...
கறைகளைக் கண்ணீர்
கரைத்துவிடுமா - என்ன...?

உதயத்தில் அஸ்தமித்த நம் உறவு
மீண்டும் உயிர் பெறுவதா...?

படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனையை நாம் சந்திக்கின்றோமா?

ஆக்கம். கி. யேம்ஸ் அல்ஸ்ரன் - பிலிபீல்ட்

(தொடர் கட்டுரையின் இரண்டாவது அங்கம்)

எமது எண்ணங்களைத் தூய்மைப்படுத்த நல்ல எண்ணங்களை எமது உள்ளத்தினுள் புகவிடுவது அவசியமாகின்றது. எப்போதும் நாம் ஒன்றையே செய்து எமது வாழ்வினை ஒரே நிலைப்பாட்டில் கொண்டு வரும்போது எமது வாழ்வின் உந்து சக்தியினை இழந்து மனதில் வெறுப்பினையும் சோர்வினையும் ஏற்படுத்த வழிகோலுகின்றோம். எனவே மாற்றமான புதிய அணுகுமுறைகளைக் கொண்டு பல்வேறு மனம் கொண்ட புதிய மனிதர்களை, புதிய அனுபவங்களை சந்தித்து புதிய சவால்களை புத்தெழுச்சியுடன் எதிர்கொள்வோம்.

வாழ்வு என்பது பிரச்சனைகளோடு இரண்டறக் கலந்தது. நாம் ஒதுங்கினாலும் பிரச்சனை எம்மைவிட்டு துரத்திக் கொண்டே வரும். அதைக் கண்டு ஒதுங்குவதிலும் அதனை எதிர்கொள்வது சிறந்தது. பிரச்சனை நம்மை என்ன செய்துவிடப் போகின்றது என்ற துணிவுடன் பிரச்சனைகளை எதிர் கொள்ளுங்கள். துன்பத்தின் ஊடாகவே இன்பவாழ்வினை நாம் சந்திக்க முடியும். துன்பம் இன்பவாழ்வின் மறுபக்கம் என்பதனை நாம் ஏன் மறக்கவேண்டும். எனவே எமது எண்ணத்தினை திட்டமிடும் முறைதான் வெற்றிக்கு வழிவகுக்கின்றது. அவரவர்களது ஆர்வத்திற்கேற்ப மனிதன் முன்னேறிய மனிதர்களாக உலவுவதைக் காண்கின்றோம். எம்மிடம் எதுவும் இல்லையே என்று நீ சிந்திக்காதே. ஏனெனில் கிழைத்தேசத்தில் இருந்து வந்த யோகமுறைதான் மேலைத்தேசத்தில் செல்வாக்குப் பெற்றது.

அது எமது நாட்டில் இருக்கும் போது அதன் பலனை நீ உணரவில்லை. அது மேலைநாட்டில் இருந்து மீ-ண்டும் கீழைத்தேசத்திற்கு உடற்பயிற்சி என்ற பெயரில் நோய்க்கு மருந்தாகக் கூறப்படும் போது நாம் அதனை ஏற்றுக் கொள்கின்றோம். என்ன மடமை. சூரியனின் கதிர்கள் ஒருமுகப்படுத்தப்படும் போதே சூடு பெற்றுத் தீ ஆகின்றது. அதேபோன்று எண்ணக் கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்படும் போ-துதான் பலன் அதிகம் கிடைக்கின்றது. நீங்கள் ஒரு தொலைக்காட்சி திருத்துனராகவோ அல்லது மோட்-டார் திருத்துனராகவோ அல்லது மரத்தொழில் உற்பத்தியாளராகவோ, மது, புகைத்தல் மற்றும் பல்வேறு கெட்ட பழக்க வழக்கங்களை நிறுத்தவோ எண்ணம் கொள்ளலாம். அலைந்து செல்லும் மன எண்ணங்களைக் கட்டுப்படுத்தி புதிய திட்டங்களை உருவாக்க ஒரு சிறிய வழிமுறையை நீங்கள் கைக்-கொள்ளலாம். எனது விதி இதுதான் என கண்மூடி இருக்க வேண்டாம். விதியை மதியால் வெல்லலாம் என்பர் சிலர். "விதியை ஒருவன் மதியால் வெல்வா-னாகில் அதுவே அவனது விதியாகும்" என்கின்-றார் மறைந்த கவிஞர் கண்ணதாசன்.

எனவே இதோ வழியொன்று,

1. உங்கள் இருப்பிடத்தை துப்புரவு செய்யுங்கள். காலை வேளை நேரத்தோடு எழுந்து உடல் கழுவி ஆண்டவனின் சிந்தனையுடன் (நம்பிக்கை இல்-லாவிட்டால் அதுவும் வேண்டாம்.) நறுமணம் கமழும் ஊதுபத்தியை ஓர் புறம் கொழுத்தி வை-யுங்கள்.
2. சாளரத்தை (யன்னலை) திறந்து பத்து நிமிட-ங்கள் தூய்மையான காற்று புகுவதற்கு வழி செய்யுங்கள். ஒரு மெழுகு வர்த்தியையும் -

www.padippakam.com

த்தியையும் அருகில் வைத்திருங்கள். பத்து நிமிடங்கள் கழிந்து சாளரத்தை மூடி ஓரிடத்தில் அமைதியாக அமருங்கள். சுமார் இரண்டு அடி தள்ளி மெழுகுவர்த்தியைக் கொளுத்தி நிறுத்துங்கள். ஆன்மீகத் தொடர்பு உள்ளவராயின் ஆண்டவனை நினையுங்கள். தொடர்புகள் அற்றவராயின் உங்கள் மனதிற்கு இனியவரை நினையுங்கள். சற்று நேரத்தின் பின் மெழுகுவர்த்தியை உற்றுப் பாருங்கள். உங்கள் எண்ணங்கள் அங்கும் இங்கும் அலைமோதி ஒரு நிலைக்கு வரும். கைகளால் உங்கள் கண்களைப் பொத்துங்கள். இருட்டில் மெழுகுவர்த்தி மூடிய கைகளுள் தெரியும். இந்நிலை உங்களுக்கு ஏற்படுத்துவதற்கு உங்கள் மனதினை துப்பரவு செய்யவேண்டும்.

அ) உங்களது எதிராளிகளைப் பெருந்தன்மையுடன் மன்னியுங்கள். இல்லையெல் அமைதியற்ற மனம் உடலில் உள்ளும் புறமும் உஷ்ணத்தையும், தலைவலியையும், மலச்சிக்கலையும், அஜீரணம், இரத்த அழுத்தத்தையும் ஏற்படுத்த வல்லது.

ஆ) நேற்று நான் புரிந்த தவறு என்ன? இன்று நான் செய்யவேண்டியது என்ன? இதில் தவறினையே நினைத்துக் கொண்டிராதீர்கள். செய்யவேண்டியதைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

இ) சிக்கலான பிரச்சனைகள் தோன்றும் போது அவை பலவழிகளிலும் அலசுங்கள். பின் அதனை மறந்து விடுங்கள்.

③ மனம் உங்கள் கட்டுப்பாட்டில் வந்ததும்

அ) ஒரு காகிதத் துண்டில் நீங்கள் செய்யவேண்டிய செயல் திட்டங்களை எழுதுங்கள்.

(ஆ) நீங்கள் எழுதிய திட்டத்தினை ஒழுங்குபடுத்துங்கள்.

(இ) மது, புகைத்தல் போன்றவற்றினை, அல்லது பல்வேறு கெட்ட பழக்கங்களை ஒழிக்க வேண்டுமாயின் உங்கள் மன உறுதியின் பேரில் கால எல்லைகளை வரையறை செய்யுங்கள்.

④ நீங்கள் தெரிவு செய்த மிக முக்கிய திட்டத்தினை உங்கள் கண்படும்படி வையுங்கள். அதைப்பற்றி அடிக்கடி சிந்தியுங்கள். ஆழ் மனதில் அவ்விடயத்தைப் பதிவு செய்யுங்கள். பலருடனும் அதுபற்றிக் கதையுங்கள். உங்களுக்குத் தேவையானவைகள் உங்கள் கையில் கிடைக்க வழியேற்படும்.

ஜனாதிபதி ஜோன் எவ் கெனடி தனது கன்னியுரையில் "நாடு உனக்கு என்ன செய்தது என்று கேளாதே நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்று கேள்" என்று கூறினார். எனவே உன்னை நீ நிறைவு செய். அதில் மற்றவனையும் கருத்தில் கொள்.

சில நகரங்களிலுள்ள இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குத் தேவையான ஆக்கங்களை தாங்களே திட்டமிடுவதன் மூலம் வாசிகசாலை நடாத்தி வருகின்றார்கள். அந்நகரத்திலுள்ள அறிவு பெற்றோரின் தொழில்நுட்ப முன்னேற்றங்களை எமது நாட்டில் எவ்விதம் பயன்படுத்தலாம் என கருத்தரங்குகளும் நடாத்துகின்றார்கள். மேலும் சிலதுறைகளில் உதவி அளிப்பவர்களின் துணையினைப் பெற்று சில தொழில்நுட்பத் துறைகளில் பயிற்சி பெறுகின்றார்கள். விஞ்ஞான, தொழில்நுட்பப் புத்தகங்களை எமது மொழியில் அல்லது யாம் அறிந்த மொழியில் பெற்றுப் படிக்கும் காலமும் அருகி

இணையான ஏனைய தொடர்புகளை ஏற்படுத்தும் காலமும் எமது வாழ்விலேயே பொன்னானது. "தன்கையே தனக்குதவி" என்னும் மொழிக்கிணங்க சந்தர்ப்பத்தை தவறவிடாமல் காலவோட்டத்தை வீணடிக்காமல் பயன்படுத்திக் கொள்வதற்கு வழிவகுங்கள் ஒவ்வொரு நகரிலும் பற்பல துறைகளில் திறமைசாலிகள் உள்ளார்கள். அவர்களது திறமைகளை வெளிக் கொணர்ந்து அவைகளை ஏனைய மக்களும் தெரிந்து பயனடைய வழிவகுங்கள். "இயக்கம்" என்ற சொல்லை முன்வைத்து பிளவுபட்டு நிற்காமல் மனித மனநிலையில் ஒன்றுபடுங்கள் காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது. ஓடிய காலம் மீண்டும் வரப்போவதில்லை. எனவே கடிகார முள்ளின் மீது உங்கள் பாதம் பதித்து வாழ்வின் விடிவிற்கு வழிகாணத்தயாராகுங்கள்.

---

நீ... நீயாகவே இரு. இன்னொருவரின் பிரதிபிம்பமாக இருக்க முயற்சி செய்யாதே. எல்லோரிடமிருந்தும் நீ வேறுபட்டிருக்கிறாய் என்ற எண்ணத்தை கொடு. அந்தத்---தனித்துவமே ஒரு கவர்ச்சியாகி--- இந்த உலகில் நீயொரு முக்கியமான இடத்தைப் பெற உதவி செய்யலாம்.

– யாரோ –



"உங்கள் தந்தை உங்களை வீட்டைவிட்டுத் துரத்தியும் மறுபடி வந்துவிட்டீர்களாமே!"

"ஆமாம். இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்."

? ?

www.padippakam.com

# விமர்சனச் சிவப்புக்கள்

—ஜின்னாஹ் புஷ்பா

தூக்கங்கள் தொலைக்கப்பட்ட
எங்கள்
துருவங்களை நோக்கிய பார்வைகள்...!!
குருதி அர்ப்பணிப்புக்களில் குளித்திருக்கும்
எங்கள் மண்ணறைகள்
நாங்கள்
துறந்துவிட்ட நித்திரைகள்---
துறந்துவிட்ட இல்லறங்கள்--
எமக்கு
கண்ணீர் அஞ்சலி எழுத,
காத்திருக்கும் நிந்தைகள்...
ஆனால்
பெருங்காங்கைகள் இன்னும் கரைகின்றன..
சுயநலகாழ்ப்புக்களின் விமர்சனச் சிவப்புக்கள்,
எங்கள்
குருதிச்சிவப்புகட்கு நடத்தும் போராங்கள்---
ஆனால்
எங்கள் விழிகள் என்றும்தாழ்வதில்லை
நாங்கள்
தொடர்ந்து நடக்கின்றோம்,
துயரங்கள் தொலைக்கப்பட....!!

www.padippakam.com

படம் அட்டையில் கதை இங்கே

# விண்மீனைத் தேடும் மின்மினிகள்

## 4

முடிவுறாத ஒரு தொடர்கதையின் சில அத்தியாயங்கள் மாதிரி----- காகிதத் தாள்கள் எழுத்துக்களால் நிறைந்திருந்தன.

இது கதையா--- அல்லது வாழ்க்கைக் குறிப்பா--- அல்லது பொழுதுபோக்குக்காக எவராவது எதையாவது கிறுக்கி வைத்திருக்கிறார்களா?

எதுவும் புரியவில்லை!

ஆனாலும் —

இந்த நித்தியாவும், பாபுவும் நெடுங்காலமாய்த் தன்னோடு பழகிக் கொண்டிருந்தாற் போல அவர்கள் மீது ஒரு பற்றுதல் உண்டாயிற்று பிரதீபாவுக்கு.

'இந்தக் காகிதத் தாள்கள் எத்தனை காலமாய் அம்மாவின் இந்த டிரங்குப் பெட்டிக்குள் தூங்கிக் கொண்டு இருக்கின்றன---!' என்று மனதில் முளைத்த கேள்வியையும் மீறிக் கொண்டு ஒரு கேள்வி -

'நித்தியா இறந்து போனாள். பாவம்..... அந்தப் பாபுவின் நிலைமை என்ன?' அம்மாவிடம் கேட்டால் தெரிந்து விடுகிறது.

தையல் மெஷினோடு போராடிக் கொண்டிருந்த நிர்மலா அருகில் காலடியோசை கேட்டு நிமிர்ந்தாள்.

---

இந்துமகேஷ்

மகள் பிரதீபாவும் ---- அவளது கையிலிருந்த காகி-
தத் தாள்களும்......?

"இதை ஏனடி எடுத்தனி---?" என்று நிர்மலா பாய்ந்த வேகத்தில் பிரதீபா ஒருகணம் திடுக்கிட்டுப் போனாள்...

"ஏனம்மா---? இது உன்ரை பெட்டிக்குள்ளை இருந்-
தது---- எடுத்துப் படிச்சன்!" என்று தயங்கினாள்.....

"கொண்டுவா இங்கை அதை!" என்று எழுந்தவே-
கத்திலேயே அவளது கையிலிருந்து பறித்துக் கொண்டு போய் மறுபடியும் பெட்டிக்குள் பத்திரப்படுத்திவிட்டுத் திரும்பி வந்தாள் நிர்மலா----

அம்மாவின் போக்கு பிரதீபாவுக்கு ஆச்சரியமாயிரு
ந்தது-----

'இந்தக் கடதாசித் தாள்களுக்கு அம்மா ஏன் இத்த-
னை மரியாதை செலுத்துகிறாள்....? இதில் அப்படி என்ன இருக்கிறது---- ஒரு கதை---- சிறிய கதை--- அதில் இவ-
ள் அத்தனை ஆர்வம் காட்டுகிற அளவுக்கு என்ன இ-
ருக்கிறது?'

— பிரதீபாவுக்கு குழப்பமாயிருந்தது----

இந்தக் கதையோடு அம்மாவின் வாழ்க்கை இரகசியம் ஏதேனும் புதைந்து கிடைக்குமா---?

"அம்மா!" என்று தாயின் அருகில் வந்தாள் பிரதீபா.
"கோவிக்காதை அம்மா--- இது ஆரின்ரை கதை?"

நிர்மலா முகத்தை நிமிர்த்தியபோது அவளது கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது....
மகளின் முகத்தைப் பார்த்து மெதுவாகப் பெருமூச்செ-
றிந்தாள்---- 'இந்தப் பதின்மூன்று வயதுப் பெண்ணிடம் சொல்லக் கூடிய இரகசியமல்ல அது---!' என்று நினைக்

www.padippakam.com

டின் சொல்லிக் கொண்டாள்----

ஒவ்வொருவர் மனத்திலும் உள்ளவை-களையெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டால் அதற்குப் பிறகு இந்த வாழ்க்கைக்கே அர்த்தமில்லா-மல் போய்விடும்----

பல சமயங்களில் இரகசியங்கள் இரகசியங்-களாகவே போய்விடவேண்டும். அப்போதுதான் பாவங்-கள் பெருகுவது குறையும்.

"சொல்லம்மா!" என்று கெஞ்சும் மகளை அணைத்து-மடியில் இருத்தி அவளது தலையை வாஞ்சையோடு வரு-டிக் கொடுத்தாள் நிர்மலா----

"நான் படிக்கிற காலத்திலே என்னோடை படிச்ச-ஒருத்தர்!"

"ஆர்---? அந்தப் பாபுவா?"

"அவர்தான்!"

"அவர் நல்லாக் கதை எழுதுவாரா அம்மா?"

"ஏதோ--- எழுதுவார்--- நாங்களெல்லாம் படிப்போ-ம்!"

"இந்தக் கதை அவரின்ரை சொந்தக் கதையா அம்மா"

"அப்படித்தான்!" என்றாள் நிர்மலா.

"இப்ப அந்தப் பாபு எங்கை அம்மா?"

"அவர் இப்ப உயிரோடை இல்லை!" என்றபோது நிர்மலாவின் குரல் அடைத்துக் கொண்டது----கண்-ணீரைத் துடைத்துக் கொண்டாள்...

பிரதீபா தாயின் முகத்தை இப்போது புதி-தான ஆச்சரியத்துடன் பார்த்தாள்--- பிரதீபாவுக்கு-நினைவு தெரிந்த நாள் முதலாய் தாயின் நெற்றியில்

படிப்பகம்

அவள் இந்த முகத்தைக் கண்டதில்லை---- இவளுக்கு-
இரண்டு வயதானபோது அப்பா இறந்துவிட்டதாக அம்மா
சொல்வதைப் பிரதீபா கேட்டிருக்கிறாள். அப்பாவின் -
முகம்கூட அவளுக்குத் தெரியாது....

அம்மாவின் வாழ்க்கையிலும் நிறைய இரகசியங்கள்

ஆனால் —

ஊருக்குள் அவளுக்கு நிறைய மதிப்பு இருந்-
தது... கௌரவம் இருந்தது---- இல்லாவிட்டால் இந்த
முப்பது வயதிலும் இவள் தன் ஒரே பெண்ணுடன் இத்தனை
மரியாதையாக வாழ்ந்திருக்க முடியாது---

"இன்னும் ஒரே ஒரு கேள்வி அம்மா!" என்று தாயின்
கன்னத்தை வருடினாள் பிரதீபா.

"கேள்!" என்றாள் நிர்மலா.

"நித்தியா செத்த பிறகு பாபு எவ்வளவு காலம் உயிரோ-
டை இருந்தவர்.....?"

"ஒரு ஆறுமாதம் இருந்திருப்பார்.....!"

"பாவம் அம்மா--- அந்தப் பாபு!" என்று வருந்தப்பட்-
டாள் பிரதீபா.

"பிறந்தவை எல்லாம் சாகத்தான் வேணும் ...ஆனால்
இப்பிடி அவலச் சாவு சாகக் கூடாது---. என்னம்மா?"

நிர்மலா பதில் ஏதும் சொல்லவில்லை.

பாபுவின் முகம் இப்போது அவள் மனத்தை
முற்று முழுதாய் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.....

நேற்றுப் போல--- எத்தனை வருடங்கள்?

பாபு இறந்த அடுத்த சில மாதங்களில்
இந்தப் பிரதீபா பிறந்தாள்--- பச்சைக் குழந்தையாக

இருந்தவள் இப்போது பாவாடை சட்டைக் காரியாய் தா-வணிக்குள் மறையும் காலம் வந்துவிட்டது---

பெட்டிக்குள் கிடக்கிற பாபுவின் கதை மாதிரி...

நிர்மலாவின் நெஞ்சுக்குள்ளும் எத்தனையோ கதைகள்

ஒவ்வொன்றையும் எழுத்துக்களில் வரைந்துவிட முடியாது. வார்த்தைகளால் வெளிப்படுத்தவும் முடியாது---

என்றாலும் -

காலம் சிலருடைய மனப் புத்தகங்களைத் திறந்து போட்டுவிடுகிறது----

நிர்மலாவின் கதையும் அப்படித்தான்----

— தொடரும்

---

## 'தென்றல்' குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள்

போட்டி இல:- 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ | ரா | ம | பி | ரா | ன் |
| ல் | மு | லே | ▨ | ஜா | ண |
| ல | ▨ | ர் | ண் | ம | த |
| ற | கு | சு | ண | ரா | நா |
| ஜோ | தி | ▨ | வ | ▨ | ச் |
| தி | ரை | வி | கு | ந் | து |

| இடமிருந்து வலம் → | மேலிருந்து கீழ் ↓ |
|---|---|
| 1-6) இராமபிரான். | 1-31) இல்லறஜோதி |
| 7-9) முல்லே | 2-8) ராமு |
| 11-12) ஜானகி(கி) | 20-32) குதிரை |
| 15-18) தர்மன் | 3-21) சுமித்ர் மலே |
| 19-24) சு(ற்)குணராசா | 16-34) வருணன் |
| 25-26) ஜோதி | 5-23) ராஜாராமன் |
| 31-36) திரைவிருந்து. | 6-36) துச்சாதனன் |

இம்முறையும் எவருமே சரியான விடைகளை அளிக்கவில்லை இருந்தபோதும் மனதுக்கு நிறைவான விடைகளை அளித்தவர்களது பெயர்கள் வருமாறு.

1) V. நிர்மலாதேவி (WITTEN), 2) T. சண்முகநாதன் (MÜLHEI

3) G. செல்வகுமார் (REHLINGEN)

இவர்களுள் மூன்றுமாத சந்தாவை (சஞ்சிகைக்குரியது) இலவசமாகப் பெறும் அதிஷ்டசாலி. G. SELVAKUMAR

KAPELLEN STR 1.

EIMER DORF

6639. REHLINGE

www.padippakam.com

# ஊமையான உண்மைகள்--!

- பீலபீல்ட். இளந்தூரன்

நாங்கள் வறுமையால்
எழுதப் பட்டு – தினம்
நாகரீக சந்தைகளில்
படிக்கப்படுபவர்கள் மட்டுமல்ல
பரிமாறப் படுகின்றவர்கள்
மௌனத்தில் ஸ்பரிசிக்கப்படும்
எங்கள் சந்தோஷங்கள்
கனவுகளின் கடிதங்களுக்கு
பதில் போட தெரியாதவைகள்
காலக் காற்று – எங்கள்
கவலைகளை--- கவலைகளை
சுமந்து போகின்றது.!
கரை சேர்க்க மட்டும்
மறந்து போகின்றது!
எங்கள் உதிரங்கள் மட்டும்
உத்தரவாதத்துடன்
உலகமெங்கும் – உங்களால்
சிவந்த தேனீராக---
சுவைக்கப்படுகின்றது.

www.padippakam.com

# மறக்கப்பட வேண்டிய -----
# சில நியாயங்கள் -----

– பிரபஞ்சன்

## 1

தமிழோடு தோன்றியது இந்துமதம்.
இன்றுவரைக்கும் வழிபாட்டோடு மட்டுமல்ல, வாழ்-
க்கை முறைகளிலும் அது பின்னிக் கிடக்கிறது. சங்க
இலக்கியத்தில் "முருகன்" தமிழ்த் தெய்வம் என்று
சொல்லப்பட்டிருக்கிறது. பின்பு சங்க மருவிய காலத்
தில் (சோழருக்கு முற்காலம்) ஆரியக் கலப்பு ஏற்ப-
ட்டதென்றும், அதனல் வடமொழிச் செல்வாக்கும்,
பிராமண ஆதிக்கமும் தமிழ்ச் சமுதாயத்தில் வேரூ
ன்றி, ஆழப்பதிந்துவிட்டதென்றும் வரலாறு கூறு-
வதைப் புரியாதவர்களில்லை. எது எப்படியிருப்பினும் –
"அன்பே சிவம்" என்று சொன்னது இந்துமதம். கொ
ல்லாமை வேண்டும் என்று புலால் உண்ணாமை நன்
என்று சொன்னது இந்துமதம்.

இந்துமதத்தில் இல்லாதது எது? இன்-
றைய விஞ்ஞானத்துக்குக் கூட எங்கள் மெய்ஞானமே
வழிகாட்டியிருக்கிறது என்றும் கூடச் சொல்கிறார்கள்
ஆனல் --- இன்றும் கூட ஆலயக் கதவுகள் அனை
வாசிப் பேருக்கு அடைபட்டுப் போயிருப்பது எதைக்
காட்டுகிறது. இந்துமதம் இதை நியாயப்படுத்தியிருக்
கிறதா? ......... இப்படிச் செய்வது கொல்லாமையை
விடக் கொடியது என இந்துக்களுக்குத் தெரியாதா?
அல்லது இந்த மதத்தில் இந்துக்களுக்கு நம்பிக்கை
யில்லையா? ....... பக்த நந்தனர் பரமனடி சேர்ந்த கதை
பக்தர்களுக்குப் புரியாததா? ........ கேட்க வேண்டிய

www.padippakam.com

நிறைய இருக்கிறது.

ஈழத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க புனி-தத்துவங்களை மட்டுமல்ல, புகழ்வாய்ந்த சமய அறி-ஞர்களை, ஆதீனங்களை இந்துமதம் கொண்டிருக்கிறது. ஆக..... திருபாணந்த வாரியாரிலிருந்து - தங்கம்மா. அப்பாக்குட்டிவரை பரலோகத்திற்குப் பாதை போடுப-வர்களைத் தவிர, பரிதாபப்படுகிற மக்களைக் கைதூ-க்கி விடுபவர்களைச் சந்திக்க முடியாதது வேதனை-க் குரியதே.

இப்படி எழுதுவது இந்துக்களையோ அ-வர்கள் மதத்தையோ கேலி செய்வதற்காகவல்ல. இந்துமதம் உண்மையென்றால், மக்களின் வழிபாடு, வாழ்க்கை முறையோடு ஒன்றிவிட்டதென்றால் கால-த்துக் கொவ்வாத கருப்பின ஒடுக்கு முறைகள் எப்போ-தோ செயலிழந்திருக்க வேண்டும். எப்படியோ தமிழ்-மக்களைவிடத் தமிழ்க் கடவுள்கள் பெரும் பணக்கா-ரர்கள்.

ஆரம்பத்தில் கூறியதுபோல மிகப்பழைய கா-லத்தில் இந்துமதம் தோன்றியது என்பதை யாரும் மறு-ப்பதற்கில்லை. அதாவது ஆண்டான் - அடிமைச் சமு-தாய அமைப்புமுறை அமுலிலிருந்த காலத்தில் இந்-துமதம் தோன்றியது என்பதை யாரும் மறுப்பதற் கில்லை. அதாவது ஆண்டான் - அடிமைச் சமுதாய அமைப்பு முறை அமுலிலிருந்த காலத்தில் எழுந்தது-தான் இந்த மதம் என விளக்கமாகக் கூறலாம். எனவே அச்சமுதாய அமைப்பு ஆதிக்கம் பெற்ற காலத்தில் எழுந்த மதம் நிச்சயமாக அச்சமூக-


படிப்பகம்

www.padippakam.com

அமைப்பை, ஆளும் வர்க்கத்தை, அடிமக்களின்-
வாழ்க்கை முறையை நியாயப்படுத்துவதாகவே இரு-
க்கும். எனவே இன்றுவரை நாம் மரபுகளாக
ஏற்றுக் கொண்டுவிட்ட சட்டதிட்டங்களுக்கும்,
எமது சமூக அமைப்பிலுள்ள குறைபாடுகளுக்கும்
எமது சமுதாய அமைப்பு முறை காரணமாக இரு-
ந்திருக்கிறது என்ற கருத்தை இப்போது விளங்
கிக் கொள்ள முடியும் என நினைக்கிறேன்.

## 2

அடக்குமுறைகள் ஆதிக்கம் பெறும்போ
அதற்கெதிரான போராட்டம் எப்போதும் நடைபெற்-
றே வந்திருக்கிறது. ஆனால் காலத்திற்கும், வளர்ச்சி-
க்கும் ஏற்ப தரத்திலும், தன்மையிலும் அவை வேறு
பட்டிருக்கிறது. உதாரணம் யூதர்களின் வரலாறு.
யூதர்களின் விடுதலையோடு கிறிஸ்தவ மதம் வளர்ந்து
பின்பு ஐரோப்பிய நாடுகளுக்கும், அங்கிருந்து இல-
ங்கை போன்ற கீழைத்தேய நாடுகளுக்கும் ஏற்று-
மதியானது பழைய கதை.

ஐரோப்பியர்களுடன் சேர்ந்து ஈழம்
வந்த பரிசுத்த வேதம் பீரங்கி முனையில் மக்களுக்-
குப் படிக்கப்பட்டது. ஈழத்தில் நடந்த மதமாற்-
றத்துக்கு தொழில், கல்வி இரண்டும் காரணம் என
இதுவரை சொல்லப்பட்டாலும் மொழி, இனம், வாழ்
க்கை முறை சகலத்திலும் இணைக்கப்பட்டும் அடி-
மைகளாக நடத்தப்பட்ட ஒரு வகுப்பினர் மனிதம
மதி, சுதந்திர வழிபாடு இவற்றுக்காகவும் மதம்-

www.padippakam.com

மாறினார்கள். விடுதலை கிடைத்ததாக மகிழ்ந்தார்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

நற்செய்தி பற்றிச் சொல்ல முடியும் என்றாலும் தமிழ்க் கத்தோலிக்கர்களைப் பற்றிச் சொல்லிப் பெருமைப்பட என்ன இருக்கிறது. மதம் மாறிய வசதி படைத்தவர்கள் தொழில், ஆங்கிலக் கல்வி என்பவற்றால் மேலும் வசதிபடைத்தார்கள். ஐரோப்பிய வாழ்க்கை முறைகளுடன் தங்களை இணைத்துக் கொண்டு, தமது பாரம்பரிய சமூக வரம்புகளை மேலும் உயர்த்தி அணைபோட்டுக்கொண்டார்கள். இதில் ஆரியவாதிகளைப் போல மதம் என்கிற சட்டையைத் தமக்குத் தேவையான வரை-போட்டுக் கொண்டு பின்னர் கழற்றிவிட்டவர்களுமுண்டு. மதம் மாறிய சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை சிலர் தமது முயற்சி, படிப்பு என்பவற்றால் தமக்குச் சமூக அந்தஸ்தைத் தேடிக்கொண்டது மறுக்கமுடியாது. ஆனால் பெரும்பாலானவர்கள் தமக்குக் கிடைத்த சுதந்திரமான-வழிபாட்டுடன் திருப்தி கொண்டனர்.

ஈழத்தில் கிறிஸ்தவ மதத்தின்-வருகையால் தான் அடிப்படைச் சமூக அமைப்பில் பலமாற்றங்களும், அதனால் நாம் பெருமையாகப்-பேசுகின்ற கல்வி, தொழில் வாய்ப்புக்களும் வளர்ச்சியடைந்தன என்பதை எவரும் மறுத்துரைக்க-முடியாது. இருந்தாலும் கிறிஸ்தவ மதத்தினால்-ஏற்படவிருந்த ஒரு சமூக விழிப்புணர்வை, வளர்-

www.padippakam.com

ச்சியை முழுமையாகப் பெற்றுக் கொள்ள யாழ்ப்பாண மக்களின் மனநிலை ஒரு தடைக்கல்லாக இருந்திருக்கிறது என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். ஏனெனில் ஆரம்பத்திலேயே விழித்துக்கொண்ட ஒருசில புத்தி ஜீவிகளால் அத்திவாரத்திலேயே குண்டு வைக்கப் பட்டிருக்கிறது. அதனால்தான் மதம்மாறிய சிறுபான்மை மக்களுக்காக சாதிக்கொரு கோவில் அக்காலத்தில் எழுப்பப்பட்டது. இன்றும் கூட வழிபாட்டுச் சமத்துவமின்மைக்காக சில ஆலயங்கள் பூட்டிக் கிடக்கின்ற வேதனையான உண்மையை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும். எமக்கு எப்போதுமே பெருந்தன்மையுண்டு. அதாவது சேவை செய்தவர்களுக்குச் சிலைகளை வைத்துக் கொண்டிருப்பதால் சிந்திக்க வேண்டியவைகளை விட்டு விடுகிறோம்....... அவ்வளவுதான்.

கிறிஸ்தவ மக்களிடையே பாகுபாடுகள் கிடையாது. எல்லோரும் கடவுளின் பிள்ளைகள்.... எனவே அச் சமூகத்திடையில் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன எனச் சிலர் கனவுகண்டாலும் நிலைமை அப்படியல்ல. இன்றும் கூட சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த (கத்தோலிக்க) துறவிகளுக்காக மட்டும் யாழ் மறை மாவட்டத்தில் சில மறைப் பங்குகள் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறது. கிறிஸ்துவின் பெயரால் இது மிக நாகரிகமா

படிப்பகம்

www.padippakam.com

மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. (வேதனைப்படு-
பவர்களுக்கு என் அனுதாபங்கள்.) ....

இந்துக்களும், கிறிஸ்தவர்களும் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியால், வாழ்க்-கை முறையால், உறவால் சகலத்திலும் ஒன்று-கவே வாழ்ந்து வருகின்றார்கள். எனவே மதங்கள் மாறுபட்டனவே தவிர இருதரப்பிலும் இதுவரை மனங்கள் மாறுபடவில்லை. ஈழத்து இனப்பிரச்-சினைத் தீர்வுக்கு சர்வகட்சி மாநாடு கூட்டப்ப-ட்டபோது பெயர்தெரியாத "விஷ்வபர்ஷித்" உட்பட எத்தனை மத நிறுவனங்கள் போட்டி போட்டு முன்-னுக்கு வந்தன. ஈழத்தில் பெரும்பான்மையான கிறிஸ்தவர் சிங்களராக இருந்தும், எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என இதுவரை உணரப்-பட்டபோதும் இனக்கலவரங்களின் போதுதானே இடைவெளிகளைத் தரிசிக்க எம்மால் முடிந்தது. எனவே மனிதனை நெறிப்படுத்தத் தேவையான மதங்கள் இதுவரை வெறித்தனத்தையே தூண்ட உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. சிறப்பாகச் சொன்னால் மதத்தை நாங்கள் பிடிப்பதற்குப் பதிலாக அது எங்களைப் பிடித்திருக்கிறது.

— தொடரும்.




உங்கள்

வாகனத் தேவைகளுக்கு,

நீங்கள்

எங்களுடன் தொடர்பு-

கொள்ளுங்கள்.

தொலைபேசி இலக்கம் - 0208/406881

முல்லைகம்

(தென்றல்)

நம்பிக்கையானது

திருப்தியை ஊட்டுவது

www.padippakam.com

# முகவரியை.... மறந்த முகங்கள்!......

"கலைக்கப்பட்ட சில கவிஞர்களின் கனவுகள்" இங்கு கவிதையாக மலர்ந்துள்ளது.

— பிரபஞ்சன்

துயரங்களில் தோய்ந்தவர்கள் நாங்கள்
அதனால்தான்........
தோல்விகளே எங்களுடன் சொந்தங் கொண்டாடுகின்றன
நாங்கள் —
பறப்பதற்கு முயற்சித்த போதே
எங்கள் இறக்கைகள்..... முறிக்கப்பட்டுவிட்டன.
ஓட்டுப் போடுங்கள்
என்ற.... உரத்த குரலில்
வேட்டுப் பூபாளங்கள்......
ஒலியிழந்து......
எங்கள் கல்லறைகள் கூட
எமக்காகக் காத்திருக்கப் போவதில்லை.
ஏனெனில்!.....
நாம் கருவிலேயே கலைக்கப்பட்டவர்கள்.
சோகங்களைச் சுமப்பதில்
அதிக சுகமிருக்கிறதாம்!
அதனால்தான்!........ எங்கள்
தேசத்தின் முகவரியை
இப்போது...... மாற்றியிருக்கிறார்கள்

www.padippakam.com

# தீபத்தை அணைக்காதே

யாழினி

12

"சந்திரா --- நீ --- சொன்னது அத்தனையும் வாஸ்தவம்தான். அவள்தான் உன் வாழ்வில் தீபத்தை ஏற்றப் பிறந்தவள். எப்படியும் --- உன்னையும் அவளையும் சேர்த்து வைப்பேன் .... இது உறுதி" என்றான் ராஜாராம். அவன் வார்த்தைகள் பிசிறின்றித் தெளிவாக இருந்தன. சந்திரனுக்கோ அளவிடமுடியாத ஆனந்தம். நண்பனைக் கட்டித் தழுவ வேண்டும் எனும் அவா பிறந்த போதும் ----- சூழ்நிலை இடம்தராததால் ---- அப்புறம் ராஜாராம் சொன்னது போல மீதியைப் பரலோகத்தில் தான் பேச வேண்டிவரும் என நினைத்தவனாக சந்திரன் தன் மகிழ்ச்சியை அடக்கிக் கொண்டான்.

வீட்டினுள் நுழைந்த ராஜாராமுக்கும், சந்திரனுக்கும் வீடு அமைதியாக இருந்தது ஆச்சரியத்தைத் தந்தது. 'எங்கே இவர்கள்?' என்று சிந்தித்தவாறு ஹாலினுள் போய் அமர்ந்தார்கள். 'காலிங் பெல்லை' அழுத்தாமலேயே வீடு ஓவென்று திறந்து இருந்ததுதான் அடுத்த ஆச்சரியம். யார் திறந்திருப்பார்கள். யாரோ நாம் வருவதைப் பார்த்துவிட்டுத் திறந்து வைத்திருப்பார்கள். சந்திரனது

www.padippakam.com

சிந்தனை... அந்த யாரில் அதிகநேரம் அலைபாய்ந்தது. சீதாவாக இருக்குமோ என்ற ஊகமே சந்திரனின் முகத்தில் ஒரு ஜீவ ஒளியை ஏற்றிவைத்திருந்தது. ராஜாராமோ எதையும் சிந்திக்கத் திராணியற்றவனாக அப்படியே சிலைபோல அமர்ந்திருந்தான்.

அப்பொழுது --- காப்பித் தட்டை ஏந்தியபடி அங்கு வந்த சீதா காப்பியை முதலில் ராஜாராமிடம் நீட்டினாள். ராஜாராமோ -- அவளை நிமிர்ந்தே பார்க்காது காப்பியை எடுத்தான். அடுத்து---- அவள் சந்திரனை நோக்கிச் சென்றபோது ராஜாராமின் கண்கள் அவனையறியாது அந்தத் திசையில் தயங்கித் தயங்கி திரும்பின. காப்பியை--- எடுக்கும் போது சந்திரனின் விரல்கள் மெதுவாக--- அவள் கரத்தை உரசியது போல ராஜாராமுக்குத் தோன்றியது. அவனால் அந்த நினைவையே சகித்துக் கொள்ள முடியவில்லை. அடுத்து--- நிலத்தில் கால் பதியாது ஓசையின்றி நடக்கும் ஒரு தேவதை போல் சீதா--- சென்று கொண்டிருந்தாள். அதை நான்கு கண்கள் இமைவெட்டாது நோக்கின. ஒரு பெருமூச்சுடன் சந்திரனை--- நோக்கிய ராஜாராம் --- சந்திரனின் பார்வை அவள் பின்னாடியிலேயே லயித்திருப்பதைப் பார்த்ததும் மெதுவாகச் செருமினான். சந்திரன் --- கொஞ்சம் கூச்சத்துடன் நண்பனைப் பார்த்து--- மெதுவாக--- மிக மிக மென்மையாகப் புன்னகைத்தான். 'அடக்கடவுளே! இவனும் கூட வெட்கப்படுகிறானே' என மனதுள் நினைத்த ராஜாராம் "கொஞ்சம் இரு சந்திரா"

படிப்பகம்

www.padippakam.com



என்றவன் அடுக்களையை நோக்கிச் சென்றான்.
அடுக்களை வாசலில் நின்று மென்மையாகச் செருமினான்.
காப்பிபோட்ட பாத்திரங்களைக் கழுவிக் கொண்டி-
ருந்த சீதா மெதுவாகத் திரும்பினாள். ராஜாராமைப்
பார்த்ததும் --- அவள் உடலில் தலையில் இருந்து
கால்வரை ஒரு சிலிர்ப்பு ஓடி மறைந்தது. அதே சம-
யம் பெண்களுக்குரிய ஜாக்கிரதை உணர்வு தலை-
காட்ட "எங்கே --- அவர். உங்கள் நண்பர்---"
என்று தயங்கித் தயங்கிக் கேட்டாள். "அவன்
ஹாலில் இருக்கிறான். அது இருக்கட்டும். எங்கே!

www.padippakam.com

வீட்டில் ஒருவரையும் காணவில்லையே!"

"அவர்கள் எல்லோரும் சினிமாவுக்குப் போய் இருக்கிறார்கள். பெரியப்பா --- ஆபீஸ் சம்பந்தமாக வெளியூர் போயிருக்கிறார்."

ராஜாராம் சிறிது நேரம் சிந்தனையுடன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். அவனுக்குத் தெரியும் சந்திரன் மறந்தும் அந்த அறைக்களைப் பக்கம் எட்டிப் பார்க்க மாட்டான் என்பது. ஏதோ---நண்பன் தன் விஷயமாகத்தான் சீதாவிடம் பேசப் போய் இருக்கிறான் என்ற மகிழ்ச்சியில் ஹால் வாசலையே பார்த்தபடி எவராவது வந்தால் நண்பனை உஷார்ப் படுத்த எண்ணியவனாக கால்மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தான் சந்திரன்.

"சீதா --- உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும். அதற்கு இதைவிட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது." என்றவண்ணம் மெதுவாக அறைக்குள் நுழைந்தான் ராஜாராம். சீதாவின் உடல் முழுவதும் ஒரு தடவை சிலிர்த்து அடங்கியது. அவனது அண்மை -- அவளுக்கு -- ஒரு வித --- தயக்கத்தையும் -- கூச்சத்தையும் -- ஏற்படுத்தியது. அவனில்லாத போது --- அவனுடன் தனிமையில் என்னென்னவெல்லாமோ பேசவேண்டுமென்று --- மனதினுள் ஒத்திகை பார்ப்பவள் அவனை நேரில் சந்தித்தபோது வாயிருந்தும் --- ஊமையாய் -- நாணமே ஒரு போர்வையாய் நின்றாள்.

ராஜாராம் சிறிது நேரம் அவளையே தன்னை மறந்து ரசித்தவன் பின்பு தன்னை சுதாகரித்துக்கொண்டு

"சீதா--- நான்தான்-- உன்னை மணக்கமுடியாது என்பதுதான் உறுதியாகிவிட்டதே! அதே வேளை உன் வாழ்க்கையிலும் எனக்கு அக்கறை இருக்கிறது. அதனால்--- உனக்குத் திருமணம் செய்து பார்க்க நினைக்கிறேன். உன் கஸ்ரங்களுக்கெல்லாம் ஒரு விடிவு. உன்னை--- ஒரு இலட்சாதிபதி மணக்க விரும்புகிறான். விரும்புகிறான் என்பதை விட தவம்---கிடக்கிறான். உனது சம்மதந்தான் வேண்டும்....."

விசுக்கென நிமிர்ந்த சீதா.

"யார்--- சந்திரன் தானே!" என்றாள் அலட்சியமாக.

"அது--- உனக்கெப்படித் தெரியும் சீதா---" என்று ஆச்சரியப்பட்டான் ராஜாராம்.

"இதைப் புரிந்து கொள்வது என்ன கஸ்ரமா! அதை அவர் பார்வை--- மேலும் அவர் நடத்தைதான் சொல்கிறதே! ஏதோ கல்யாணம் பண்ண விரும்புகிறார் என்ற மட்டில்--- கொஞ்சம் பரவாயில்லேதான். ஆனால்--- அதற்கு நானும்--- சம்மதிக்க வேண்டுமல்லவா!"

"சீதா! எல்லோருமே அவனைத் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறீர்கள். அவனிடம் குறைகள் இல்லையென்று நான் சொல்லவில்லை. குறைகள் என்பதை விட கொஞ்சம் -- ஏன் சற்று அதிகமாகவே பலகீனம் இருக்கிறது. இவை எல்லாவற்றிலும் மேலாக--- அவனிடம் ஒரு

நல்ல இதயம் இருக்கிறது. இதை ஏன் ஒருவரும் புரிந்து கொள்கிறீர்கள் இல்லை. நீ--- அவன் வாழ்க்கைத் துணையாக அமைந்தால் --- அப்புறம் பாரேன் சந்திரன் முற்றிலும் மாறிவிடுவான்."

"போதும் --- நிறுத்துங்கள். வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள்."

"சீதா --- நீ என்னைத் தவறாகப் புரிந்து கொள்கிறாய். நான் --- உன் நல்வாழ்க்கைக்குத்தான் ----"

"எனது நல்வாழ்க்கைக்கா --- அல்லது உங்கள் நண்பரின் நல்வாழ்க்கைக்கா?" சீதாவின் வாயிலிருந்து வார்த்தைகள் தீவிரமாக ஒலித்தன. இவளால் இப்படிக் கூடப் பேசமுடியுமா? என்று ஆச்சரியப்பட்டான் ராஜாராமன். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல் சாதுவாக இருக்கும் --- இவளிடம் இப்படி ஒரு உத்வேகமா! ராஜாராமனால் நம்பமுடியவில்லை.

"சீதா --- நீ -- எப்படி நினைத்தாலும் சரிதான். சந்திரன் என் நீண்டகால நண்பன் --- ஏன் என் பள்ளித் தோழன். அதை நான் மறுக்கவில்லை. அவன் என் உயிர் நண்பனாக இருந்தால் நீ என் உணர்வோடு கலந்தவள். என் உயிருக்கும் மேலானவள். இந்தச் சின்ன விஷயம் கூட உனக்குப் புரியவில்லை. என்னைப் பொறுத்தவரை சீதா --- நீ ஒரு அற்புத தீபம் .... அந்தத் தீபம் சுடர்விட்டுப் பிரகாசிக்க எண்ணெய்யாக நான் இருக்க முடியாது தவிக்கின்ற துர்ப்பாக்கிய சாலி. இருந்தாலும் ----

www.padippakam.com

சந்திரன் ---- இதற்கு உதவுவான். அவன் உன்னை--- ரொம்பவும் நேசிக்கிறான் சீதா --- இதை நீ நம்பு."

"நான் அவரை நேசிக்கவில்லையே. இந்தச் சின்ன விஷயம் ஏன் உங்களுக்குப் புரியமாட்டேன் என்கிறது." என்றவள் கண்கலங்க "ராஜா --- என் இதயத்தில் நிறைந்திருப்பது நீங்கள் ஒருவர்தான். அது எப்படி நிகழ்ந்தது ஏன் நிகழ்ந்தது என்பது எனக்குத் தெரியாது. என் இதயத்தில் இனி எவருக்கும் இடமில்லை. என்னை மன்னித்து விடுங்கள். காலமெல்லாம் கன்னியாக --- வாழ நான் தயார். உங்கள் கழுத்தில் மாலையாக வாழ எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் உங்கள் வீட்டு வேலைக்காரியாக உங்கள் பாதத்தில் ஒரு உலர்ந்த சருகாக நான் இருக்க விரும்புகிறேன். நான் வாழும் வரை இந்த தேகம் --- ஆன்மா எல்லாம் உங்களுக்கு மாத்திரமே சேவைசெய்ய விரும்புகிறது அப்படியே --- அந்த நிறைவுடனையே இந்த உலகத்தை விட்டு மறைய நான் விரும்புகிறேன். தயவு செய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள்.

ராஜாராமுக்குப் --- பாதாதிகேசமும் ஒருமுறை --- அதிர்ந்தது. இவள் --- என்ன --- இப்படிப் பேசுகிறாள். நான் இவளது அன்புக்கு அருகதையானவன்தானா? சே! என்று தன்னைத்தானே ஒருமுறை வெறுத்துக் கொண்டான்.

அவன் மனதில் --- எப்படியும் அவளை வாழவைக்க வேண்டுமென்று எண்ணம் ஆணித்தரமாக ஏற்பட்டது. எதைச் சொல்லியாவது அவளைச் சம்மதிக்க வைத்தே ஆகவேண்டும் என்று நினைத்தவன் "சீதா வீணான கற்பனைகளில் காலத்தைக் கழிக்காதே. நிதர்சனமான ஒன்றைப் பற்றி சிந்தி.

www.padippakam.com

நீ கன்னியாக வாழ்ந்து --- நீயும் வாழாமல் என்னையும் வாழவிடாமல் செய்யாதே. நீ --- என் முடிவுக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும். நீ எப்படியும் சந்திரனை மணந்தாக வேண்டும். இது என் மீது ஆணை."

"ஆணை இட்டுவிட்டால் காதல் ஜோதி என்ன அணைந்தாவிடும். என் காதல் நெருப்பில் அந்த அக்கினிப் பிரவாகத்தில் உங்கள் ஆணைதான் அழிந்துவிடும். என்னை இனியும் வற்புறுத்தாதீர்கள். தயவு செய்து -- போய்விடுங்கள்."

"சீதா! நீ --- சந்திரனை மணக்க மறுத்தால் அதன்பின் என் பிணத்தைத்தான் பார்ப்பாய். இது சத்தியம். சொல் --- எது உனக்குச் சம்மதம்." அவன் வார்த்தையில் உறுதி இருந்தது.

"ராஜா!" என்று குரல் உடைந்து சிதறிக் கண்கலங்கி நின்ற சீதா அவன் கரத்தை மெதுவாகப் பற்றி "ராஜா --- நீங்கள் --- எனக்காக இல்லையில்லை -- உங்கள் நண்பருக்காகச் சாகவேண்டாம். நீங்கள் வாழ வேண்டும். அதற்காக --- நான் நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன்" என்றவள் அவன் கரத்தில் தன் கரத்தைப் பதித்துவிட்டு அப்படியே அடுக்களையை விட்டுத் தன் படுக்கையறை நோக்கி ஓடினாள்.

ராஜாராம் பரிதவிக்கும் அவளுக்காகவும் தன் நெஞ்சுக்காகவும் சேர்த்து ஒரு பெருமூச்சொன்றை விட்டவனாக ஹாலை நோக்கி வந்தான். அங்கே --- ஒரு ஆச்சரியம் அவனுக்குக் காத்துக் கிடந்தது

— தொடரும்...

படிப்பகம்

www.padippakam.com

# அன்று எல்லையிலே — இன்று?

— சந்திரன்

(சிரிக்க மாத்திரமே....)

பூசணிக்காய் போல் இருந்த பூரணி
புடலங்காய் போல் ஆனதேனடி!
மாதாளை போல் இருக்கும் மாதவி
உன் மனதில் இருப்பவனை கூறடி!
தக்காளி போல் இருக்கும் சாரதா
தவறு செய்ய என் மனதில் சேர்ந்ததா!
பப்பாளி போல் இருக்கும் பாதுசா
பலநடவை என் மனதில் வந்ததா!
சுரக்காயைப் போல் இருக்கும் சுந்தரி
கொடிவிட்டு என் மனதை ஆதரி!
நீள வாழை இலை போன்ற நித்தியா
நீண்ட நாளா என் மனதில் சுத்தியா!
காஞ்சோண்டி போல் இருந்த காஞ்சனு
எனை கட்டிப்பிடி என்று கெஞ்சினு!
முல்லை இலைபோல் இருந்த மல்லிகா
அன்று எல்லையிலே நடந்ததை நீ மறந்தியா!

ஆசிரியை :— "நான் அன்று அழகாய் இருந்தேன்" என்பது ஓர் நடந்து முடிந்த காலம். அதாவது இறந்த காலம். எனவே கண்ணா "நான் இப்போது அழகாய் இருக்கின்றேன்" என்பது?

கண்ணா :— என்பது டீச்சர் சுத்தப் பொய்

— ரவீந்திரன் —


படிப்பகம்

www.padippakam.com


# VIDEO CLUB

RÖMERBRUNNEN - 25-8-4.
4050 M.G. 2

T.P No 02166 187874
02161 32037

உங்கள் இல்லங்களின் சமையல் அறையில்
தமிழ் மணம் கமள உணவு வகைகளை (சகல)
உங்களுக்காக லண்டனில் இருந்து தருவித்து
விநியோகிக்கின்றார்கள் SR ஸ்தாபனத்தார்.
• மொத்த வியாபாரிகட்கு விசேஷ சலுகை.
மற்றும் சகல சாறி வகைகளும், சாறம்,
என்பனவும் விற்பனைக்கு உண்டு.

Pro- SIVA

**QUALITY & QUICK DISTRIBUTERs**
**IN**
**B. R. D**



படிப்பகம்

www.padippakam.com

குறுநாவல்

# தூங்கும் உறவுகள்

விடிந்துவிட்டதன் அறிகுறியாக சூரியனின் ஒளிக்கற்றைகள் தாராளமாக ஓட்டைக்கூரையினூடாக கனகம்மாவின் படுக்கை வரை வந்து விழுந்தது. பலகாலம் வேயப்படாத ஓலைக்கூரை. அவள் கஷ்டப்பட்டு பணம் புரட்டி தன் மகனை ஜேர்மனிக்கு அனுப்பிவிட்டு ஆகாயம் முட்டக் கனவுக் கோட்டைகளைக் கட்டி வைத்திருந்தாள். அதில் முதலில் ஒரு வீட்டை அத்திவாரம் போட்டு சுவரெழுப்பி மேலே கூரையை ஓலையால் வேயத்தான் முடிந்தது. மகன் பணமனுப்ப ஓடு போட்டுவிடலாமென்றெண்ணினள். ஊர் நிலைமை படுமோசமாகி கனவிலும் நினையாத அளவுக்கு வீடுவாசல் இழந்தோரும், உயிர்கள் அழிந்தோரும், உடல் ஊனமுற்றோரும் எந்நேரமும் இறக்கும் விநாடியை எண்ணிக்கொண்டு வாழும் வாழ்க்கை. தன் கண் முன்னாலேயே ஆமிக்காரனொருவனின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிய கணவனை இழந்து விதவையாகி..... வலுவிழந்து..... படுக்கையோடு படுக்கையாக...... தன் ஒரே மகனின் கடிதங்களை எதிர்பார்த்து, நாளாந்தம் தபாற்காரரின் வருகையை எதிர்பார்த்திருந்தாள் கனகம்.

'அண்ணா ஜேர்மன் போய்விட்டார். இனி எங்களைப் பிடிக்கேலாது' என்று ஒருவிதப் பெருமையும் மகிழ்வும் சேர தங்கைகள் அருள்மொழியும், மலர்விழியும் ஆனந்தத்தில் மிதந்தனர் — நாம் நினைப்பதொன்று, நடப்பது வேறு தானே — யாரும் எதிர்பார்த்திராதபடி தந்தை திடீரென்று மரணமானதும்..., தாய் படுத்த படுக்கையானதும்; அண்ணன் இளமாறன் பத்துமாதகாலமாக கடிதமே எழுதாமல் விட்டதும்..., தங்கை மலர்விழி தன் வயதுத் தேவையின் அவசரத்தில் இனி தாய் சகோதரம் அவசியமில்லையென்

---

**சித்திரா. மணிவண்ணன்**

www.padippakam.com

றெண்ணி ஒரு இளைஞனோடு ஓடிப் போனதும் ...., அதன் பின்.. அருள்மொழி நாட்டுத் தேவைக்காகத் தன்னை அர்ப்பணித்து போராளியாக மாறியதும் ..... கண்மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்துபோன கதை. இன்றும் தபாற்காரரின் மணிச் சத்தம் கேட்காமல் ஏமாந்துவிட்ட தாய், 'தம்பி... இளமாறு'... என ஏக்கத்தோடு புலம்பினாள். தாயை ஒருவாறு தேற்றி, அவளது கடமைகளைச் செய்து முடிந்த அருள்மொழி, உறவுகளை அறுத்துவிட்டிருக்கும் அண்ணாவுக்கு கடிதமெழுதத் தொடங்கினாள்.

அன்புள்ள அண்ணாவுக்கு,

நாம் இன்னும் இறக்கவில்லை. உனது சுகமறிய ஆவல். இந்தப் பத்துமாத காலமாக எம்மை மறந்து கடிதம் கூடவா உன்னால் எழுதமுடியவில்லை. பத்துமாதம் சுமந்த உன் தாயைக் கூட உன்னால் நினைக்கமுடியவில்லையா? 'ஜேர்மனில் எல்லோரும் உழைக்கிறாங்கள். நானும் போக வேணும்' என்று பிடிவாதமாக நின்று கடன்பட்டுப் போனதையெல்லாம் மறந்துவிட்டாயா? எங்களுடன் உள்ள இரத்த பந்தம் உனக்கு சம்பந்தமே இல்லை என்கிறாயா? எழுத்தாளர் சாண்டில்யனின் கதைப் பைத்தியமான எம் அப்பா; காதல், போர் வீரம் நிறைந்த ஒரு கதாநாயகனின் பெயரை, போயும் போயும் உனக்கு வைத்தாரே! அப்பாவின், மரணச் சடங்குகளுக்கென நீ கடிதமே எழுதாமல் அனுப்பி வைத்த பணத்தோடு உன் உறவு வெகுதூரத்தில் போய்விட்டதா?

அண்ணா! ஜேர்மனில் தமிழ் மக்கள் வாழும் வாழ்க்கை நான் நன்கு அறிவேன். அகதிப் பணமாக தரும் பணமும், வேலைசெய்து உழைக்கும் பணமும் சேர்ந்து, ஏதோ ராஜபோக வாழ்க்கை வாழுவதாக நினைப்பு. ஒரு சாதாரண ஜேர்மனியனின்-

www.padippakam.com

வாழ்வைப் போல சகல வசதிகளோடும் வாழ்கிறீர்கள். ஊர், சொந்தம், பந்தம் என்ற நினைவே எழாதபடி கல்யாணச்-சடங்கு, சாமத்தியச் சடங்கு, பிறந்த நாள் விழா, குழந்-தைக்குத் தொட்டிலில் போடும் விழா, பல்லுக் கொழுக்க-ட்டை விழா..... அந்த விழா.... இந்த விழா என்று ஒரே கொண்டாட்டங்கள். – தேவைதான்.... வாழ்க்கையில் - நாம் சந்திக்கும் நினைவுகூர வேண்டிய நிகழ்வுகள் தான் ஆனால் – அதற்கெல்லாம் தாராளமாகச் செய்யும் செலவு-கள் அவசியம்தானா?.... அண்ணா! என்ன உனக்கு மட்டும் தான் குடும்பத்தில் அக்கறையா என்று திட்டுகிறாயா? பரவாயில்லை. ஜெர்மன் வாழ்வு, கவலையில்லாத சந்தோ-ஷமான பொழுது போக்குகள் நிறைந்தது தானே! ஊர் நினைவு இடையிடையே நிச்சயம் வரும். ஆனால் மறு-நிமிடமே மறந்தும் போகுமில்லையா? காரணம்..... உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. உன் எண்ணச் சூழ்நி-லையும், நீ சகல சுதந்திரங்களோடும் வாழும் புதிய உலகும்-தான். அதற்காக.., கடிதம் கூட எழுதுவது வீண் நேரமென்று நினைத்துவிட்டாயா?

நாட்டு நிலைமை வர வர மோசம். 'ஹெ-லிகொப்டர்கள்' தாழ்வாகச் சுட்டுச் சுட்டுப் பறக்கும்பொழுது நாம் இதோ இறங்கப் போகிறோமென்று நினைக்கிறோம், தாண்டிப் போனதும் இறக்கவில்லையென்று அமைதியடைகி-றோம். எம் உற்றார் உறவினர் பலர் ஷெல் தாக்குதல்களால் இறந்துவிட்டனர். நீ முற்றிலும் எதிர்பாராத அளவு இங்கு ஆண், பெண், குழந்தை வயோதிபர் பலர் கைகள், கால்கள் கண்கள் இழந்த நிலையிலும், நச்சுத் திராவகத்தினால் பாதி-க்கப்பட்டோரும், இளம் விதவைகளும் வரும்போது நீ எதிர் கொள்வாய். இவற்றிலிருந்தெல்லாம் விடுபட்டு, அந்-நியனின் ஆதிக்கமின்றி சுதந்திரமாக நாம் உலவும் நாளை எதிர்பார்க்கிறோம். ஆனால் வெளிநாடுகளில் வாழும் சில தமிழினம் ஏனடா பிரச்சனை முடிகிறது, இந்த அ-ருமையான சுகபோக வாழ்வைவிட்டு எப்படிப் போவதை-



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

ன்று அங்கலாய்ப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். என்றோ ஒருநாள் சொந்த மண்ணுக்குப் போய்த்தானே ஆகவேண்டும் ... என்பதை மறந்திருக்கிறார்கள் போலும். அண்ணா! அம்மா உன்னை நாளாந்தம் கூப்பிடுகிறா. உனக்குத்தான் அவை கேட்காதபடி பாசக்கதவுகள் அடைத்துவிட்டனவே. நீ செல்லம் பொழிந்து விளையாடிய தங்கை மலர்விழி தன் வாழ்வைத் தானே அமைத்துக் கொண்டாள். அதில் தப்பென்ன? பாதுகாக்க அண்ணனோ, வாழ்வை ஏற்படுத்த அப்பாவோ இல்லாத நிலையில் அவளின் இருபது வருட அவசியம் முடிந்து எம்மை மறந்து சென்றுவிட்டாள். இந்த பத்துமாத காலத்துள் எவ்வளவோ நடந்து முடிந்துவிட்டன. உனக்கு நானெழுதிய எத்தனையோ கடிதங்களுக்கு நீதான் பதிலே போடவில்லையே!

அப்பா இறந்த மறுமாதமே, நானும் பெண்கள் இயக்கப் பேரணியில் சேர்ந்து கொண்டேன். இருபத்தைந்து வருடங்களாகப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த இந்த உடலும் உயிரும் அந்நியனின் கையால் ஒருநிமிடத்துள் அழிக்கப்படுவதை விட, என் கரங்களேந்தும் துப்பாக்கிக் குண்டுகள் ஒரு கூலிப் படையினையாவது தொலைத்துவிட்டு மடிவது மேலில்லையா? எமது போராளிகளின் தீரம் மிக்க போராட்டம் நீங்கள் வாசித்தறியும் பத்திரிகைகள் மூலமோ, கேட்டறியும் செய்திகள் மூலமோ உணர்ந்து பார்க்க முடியாதவை. எனது பயிற்சிக் காலம் முடிந்துவிட்டது. எனது நாட்டுக்கு ஒரு சுபீட்சம் கிடைத்தால் என் வீடும் உருப்படுமென்ற நம்பிக்கையோடு மன உறுதியை வளர்க்கிறேன். எம் மக்களின் உயிரை எதிரிகளிடமிருந்து காப்பதில் எம் போராட்ட இளைஞர்களோடு யுவதிகளான நாமும் இரவுபகலாக ஈடுபடுகிறோம். நாம் வாழும் காலகட்டமும் சூழலும் அண்ணா ..... நீயோ உன் போன்றோரோ சுட்டுப் போட்டாலும்-



படிப்பகம்

www.padippakam.com

நம்ப முடியாதவை. தொண்டையை நனைப்பதற்காகத் தண்ணியும் வயிற்றை நிரப்புவதற்காகப் பாணும் தான் அநேகவேளைகளில் சாப்பிடுகிறோம். ஏதோ நாம் செய்த புண்ணியம் தான்; உயிருக்குப் பயந்தும், உழைக்க என்றும் ஓடித் தப்பி வெளிநாடுகளில் வாழும் தமிழர் தொகையினையும் இங்கிருந்திருந்தால் அவர்களையும் சேர்த்தல்லவா நாம் பார்த்திருக்க வேணும். யார்...... யாருடைய தலைவிதியை நோவது.

அண்ணா! உனக்காகவோ எனக்காகவோ மட்டும், இந்தப் போராட்டம் நடக்கவில்லை. சொந்த வீட்டில், சொந்த மண்ணில் சுதந்திரத்தை இழந்த ஒவ்வொரு தமிழ்க்குடிமகனின் உயிர் உடமைக்காக நடக்கும் தன்மானப்புரட்சி, தார்மீகப் போராட்டம். ஆனால்....— ஒன்று மட்டும் உண்மை, இங்கு வாழும் நாம் ஒருவித தார்மீகக் கட்டுக் கோப்புக்குட்பட்டு பலவித சொல்ல முடியாத இன்னல்களை அனுபவித்து ஒருமுகப்பட்ட ஒருவித அமைதியான வாழ்க்கை வாழ்கிறோம். அதாவது சீதனக்கொடுமை, சாதி ஒழிப்பு, பணக்கார ஏழைத்தனம் இவை சிறிது சிறிதாக ஒழிந்து இறுதி மூச்சுவரை போராட்டம் என்பதிலேயே குறியாக வாழ்கிறோம் —. ஆனால்.... சகல வசதிகளோடும், அதிக பணப் புழக்கத்தோடும் அந்நிய நாடென்பதையும் மறந்து அங்கும் கூட சாதித் திமிர், அகம்பாவம், பொறாமை இவற்றோடு வாழும் சில வெளிநாட்டுத் தலைமுறை... எரிந்து சுடுகாடாகி சாம்பல் மேட்டில் பறக்கும் சுதந்திரக் கொடி தாங்கிய தம் சொந்த மண்ணில் காலடி வைக்கும் போது, பழையன கிளறி தமிழ் சமுதாயம் மீண்டும் கலங்குமென்பது முழு உண்மை.

அண்ணா! நான் எழுதுவது உனக்கு ஆத்திரமூட்டலாம். வாசிக்க எரிச்சலாக இருக்கலாம். ஆனால் எல்லாமே உண்மை. உண்மைகள் என்றுமே உறங்குவதில்லை; உண்மைகள் எக்காலமும் நியாயமானவை.

படிப்பகம்

உண்மைகள் உண்மையானவை — சொந்த மண்ணில்-சுதந்திரத்தாயின் மானம் காக்கத் தவறி..., போராட்டத்தில் குதித்து அந்நியனுக்கெதிராக ஆயுதமேந்தப் பயந்து..., பொருளாதாரத் தேவை ஒன்றையே முதன்மையாக்கி... உவ்விடம் வாழ்கின்ற உன்போன்ற எத்தனையோ இளைஞர்கள்...—; எங்களுக்கென்றொரு நாடு; அங்கு நடப்பது பயங்கரப் போராட்டம். உயிரையும் விட நாடு முக்கியமென்று நெஞ்சை நிமிர்த்தி எதிர்த்து நாளாந்தம் மரணிக்கும் புரட்சிப் பூக்கள்... — இவையெல்லாவற்றையும் மறந்து... இல்லை... மறக்க முயற்சித்து வாழ்கிறார்கள். சில இளைஞர்கள் வெளிநாட்டுக்கு ஓடிவந்தபின், மனச்சாட்சியின் உறுத்துதலால் கொஞ்ச நஞ்ச உணர்ச்சியோடு பிரச்சாரத்தில் ஈடுபடுவதும்; அவர்களைக்கூட சுயநலப் பேச்சுக்களாலும், விதண்டாவாதங்களினாலும் ஏளனம் செய்து இறுகிய பண உதவியைக்கூட வழங்க மறுக்கும் எம் இனத்து ஒரு சிலரின் இழிநிலைகளையும் நான் அறிந்தேன். இவர்களெல்லாம் நாடு எமக்கென்ன செய்ததென்று கேட்கிறார்களே தவிர; நாட்டுக்காக நாம் என்ன செய்கிறோம் என்பதை சிந்திக்க மறுக்கிறார்கள்.

அண்ணா! எனக்கோ நாட்டைக் காக்கும் கடமையினால் ஊண் உறக்கமில்லை; அம்மாவுக்கோ உன் நினைவால் உணவு உறக்கமில்லை. இன்றைய சூழ்நிலையில் இங்கு வாழும் எமக்கு கையில் பணமிருந்தால் ஒட்டி இருக்கும் உயிரை கொண்டிருப்போம். பணம் இல்லாத வீடுகளில் பட்டினிதான். பணம் இல்லாமை தான் எமக்கு வாழ்க்கைப் பிரச்சனையாக உள்ளது; பணம் அனுப்ப வேணுமே என்பதே உனக்குப் பெரும் பிரச்சனையாக இருக்குமில்லையா? அண்ணா! உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் அம்மாவிற்காக ஒரு கடிதமாவது போடு. இவ்வளவு நேரமும் பொறுமையாக இக்கடிதத்தை வாசித்ததற்கு நன்றி. உன்னிடமிருந்து ஒரு கடிதம்

www.padippakam.com

மட்டுமே எதிர்பார்க்கிறேன் நான். இப்போதெல்லாம் எதற்-
காகவுமே கவலைப்படுவதில்லை. கண்களில் நீர் கூட வற்றி
விட்டது. என்போன்ற எத்தனையோ தங்கைகள், அக்கா-
க்கள், மனைவியர், பெற்றோர்கள்..... உன் போன்றோருக்கு
கண்ணீர் மை கலந்து கடிதமெழுதுவதை நானறிவேன்.
நாட்டுக்காக நீ எதுவுமே செய்யாமல் விட்டிருக்கலாம்.
வீட்டுக்காக தூரத்தே தெரியும் உன் உறவுக்காகவா-
வது உன் கடமையைச் செய்வாயென்று நம்பி உன் பதி-
லை எதிர்பார்த்து இத்துடன் முடிக்கிறேன்.

அன்புடன் தங்கை அருள்மொழி.

நீர் முட்டிய கண்களோடு எழுதி முடித்த அருள்மொழி முதல்
வேலையாகக் கடிதத்தை தபாலில் சேர்ப்பித்தாள்.

—: தலைக்குக் கை கொடுத்தபடி தங்கையின் நீண்ட
கடிதத்தை பலவித உணர்ச்சி பாவங்களோடு வாசித்து
முடித்துவிட்டு பெருமூச்சு விட்டான் இளமாறன். முகத்தில்
சிறிய கவலை ரேகைகள் ஓடின.

திடீரென... தொலைபேசி மணி தட்டியெழுப்ப அவசரமாக
தொலைபேசிக்கு செவிகொடுத்தான். மறுமுனையில் அவ-
னது நண்பன் ராகுலன் "மச்சான்... சில்வெஸ்ரர் ஸ்ரலோ-
ன்ரை றம்போ II தியேட்டரிலை பார்க்கப் போறம். வாறி-
யே நீயும்..." என்றான். "அதுக்கென்ன.. மச்சான்... பின்-
னேரம் நாலு மணிக்குத்தானே... ஓகே... வாறன்... சூன்"
என்று தொலைபேசியை வைத்தவன் துள்ளி எழும்பினான்.
ஜன்னல் வழியாக வீசிய காற்றில் அந்தக் கடிதம்-
பறந்து வந்து மேசையடியில் இருந்த குப்பைக்கூ-
டைக்குளில் விழுந்தது. அதை எடுத்து வைக்கக்-
கூட நேரமில்லாமல், இளமாறன் நண்பர்களைத்
தேடி தியேட்டருக்கு போய்க் கொண்டிருந்தான்.

www.padippakam.com

# தென்றலின் ஓராண்டு காலப்பகுதியின் கடந்து வந்த பாதைபற்றிய வாசகர் கண்ணோட்டம்

இந்த வரிசையில் இந்த இதழை அலங்கரிப்பவர்

வாசகர் அல்ஸ்ரன்

தென்றலின் ஓராண்டு நிறைவு பெற்றுள்ள வேளையில் அதன் செயல்பாட்டினை சற்று பின்னோக்கிப் பார்த்து மகிழ்வு கொள்ளும் உரிமை வாசகர்களாகிய எமக்கு நிச்சயம் உண்டு.

எனவே கடந்த ஓராண்டில் தென்றல் சாதித்ததுஎன்ன என்பதையறிய பழைய மலர்களைப் புரட்டினேன். சிறிய தோர் ஆய்வில் நான் கண்ட தெளிவான உண்மைகளை எனது உடன் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

மேற்கு ஜேர்மனியிலே தமிழ் வாசிக்க ஏடுகள் இல்லை என ஏங்கிய காலம் ஒன்று உண்டு. இக்குறையை நீக்க ஒரு சில ஏடுகள் உதயமானாலும் காலத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அவை மறைந்தன. தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் மலர் ஒன்றினை வெளியிடுவதென்றல் இலகுவான காரியம் அல்ல. இத்தகைய ஒரு நிலையில் மாதாந்த வெளியீடு ஒன்று ஓராண்டுகள் நிறைவு பெற்று வெற்றி நடை போடுவது மகிழ்வடையக் கூடியதொன்றுடன் பாராட்டப்படவும் வேண்டியதொன்றாகும்.

1. தென்றலிலே என்னை மிகவும் கவர்ந்த பகுதி "சிந்தனைக்கு" என்னும் பகுதியாகும். இப்பகுதி சிந்தனையைத் தூண்டிவிடுவதுடன் மட்டும் நில்லாது சிந்தனைய உலுப்பி விட்டும் சென்றிருக்கிறது.

2. ஆசிரியர் பகுதி வாசகர்களை, எழுத்தாளர்களைத் தூண்டிவிடுவது மட்டுமல்லாது, தேவையேற்படின் புயலாகவும் மாறி சீறி "தன்" நிலையைத் தெளிவாகவும் -

www.padippakam.com

நயமாகவும் புரியவைத்திருக்கின்றது.

3. கவிதை, கட்டுரை சிறுகதைப் பகுதிகள் புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்து உற்சாகமூட்டியிருக்கின்றது. கவிதை, கதைகளைப் பொறுத்த அளவில் ஆரம்பப்பள்ளியின் உற்சாகத்தினை எழுத்தாளர்களுக்கு வழங்கி அவர்களை உருவாக்கியிருக்கிறது. சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் படைப்புக்கள் தென்றலை மெருகூட்டி இருக்கின்றது.

4. குறுக்கெழுத்துப் போட்டி வெறும் போட்டியுடன் மட்டும் நின்றுவிடாது தெரிந்து கொள்ள வேண்டிய பலவிடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

5. படவிமர்சனங்கள், விளம்பரங்கள், தெரிந்து கொள்ள வேண்டியவைகளை அறியத்தருகின்றன.

6. மிகவும் பிரயோசனமான வைத்தியக் குறிப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

7. மிகவும் முக்கியமானது "ஜூனியர் தென்றல்" என்னும் புதிய வெளியீடாகிய கல்விதழ் ஆகும். கிடைத்தற்கரிய இவ்விதழை மேற்கு ஜேர்மனியில் தாங்கள் வெளியிட்டமை எம் குழந்தைகளுக்கு அரியதோர் வரப்பிரசாதமாய் அமைந்துள்ளது.

8. குற்றம் சுட்டிக்காட்டப்பட வேண்டியது ஒன்றும். "எழுத்து" கண்டிப்பாகத் தெளிவு பெற வேண்டும். இதனை ஆசிரியர் குழு கவனிப்பீர்கள் எனத் திடமாக நம்புகின்றோம்.

மொத்தத்தில் தகுதியுள்ள இவ்விதழை வாசகர்களுக்கு வழங்கிவரும் தங்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஆசிரியர் குழுவுக்கும் நன்றி நவில்கின்றோம். உங்கள் பணி தொடர வாழ்த்துகின்றோம் ✦

www.padippakam.com

# "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி

## இலக்கம் :- 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 ■ | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம் →**

1-6) நடிகர்கள் இதைத் தங்களின் உலகமாகக் கூறுகின்றனர்.

7-9) எப்போதும் ஒன்றுக்கு மேற்பட்டது இது. இங்கு குழம்பியுள்ளது.

11-12) என்னுடைய இனிய — அவள். இங்கு வலமிடமாயுள்ளது.

13-18) ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதோ ஒரு வகையில் இருக்கும். இங்கு குழம்பியுள்ளது.

22-24) இதைக் கைகேயிடம் கொடுத்துவிட்டு தசரதன் பட்டபாடிருக்கே. இங்கே இது வலமிடமாயுள்ளது.

27-28) இது இன்றி எம்மால் எதுவும் செய்ய முடியாது. இங்கு இது முழுமையாக இல்லை.

31-36) கடவுளைத் தானை இணைத்த திரைப்படம் இங்கு வலமிடமாயுள்ளது.

**மேலிருந்து கீழ் ↓**

1-31) இது ஒரு திரைப்படத்தின் பெயர்

2-14) இதற்காகப் போட்டிபோடுபவர்களைக் காணலாம். இது இங்கு குழம்பியுள்ளது.

3-15) தொல்லையை இப்படியும் அழைக்கலாம். இங்கு இது முற்றுப்பெறவில்லை.

27-33) பெண்களுக்கு மசக்கையாக வந்து இது வரலாம். இங்கு இது குறை உள்ளது.

16-34) விடுதலை வீரர்களின் முக்கியகொள்கை இது. இங்கு ஒன்றின்றிக் கிடக்கிறது.

5-23) கலக்க உதவுவது குழம்பிக் கிடக்கிறது.

6-36) அம்சங்களில் இது கடவுளுக்கு நிகரானபோதும் இங்கு தலைகீழாகக் கிடக்கிறது.

போட்டி முடிவுத்திகதி- 22.9.87

மேலுள்ள படிவத்திலேயே விடைகளை எழுதி அனுப்பவும். சரியான விடைகளை எழுதியோரில் அதிஷ்டசாலி 3 மாத சந்தாவை இலவசமாகப் பெறுவர்.

# MYOCARDIAL INFARCTION
## மயோகாடியல் இன்ஃபாக்ஷன்

திருமதி – யாழினி. தர்மகுமார்
(உதவி வைத்தியஅதிகாரி)

இதுபற்றி மிகத் தெளிவாக எழுதுவது ஒரு வைத்திய அறிக்கை போன்று அமைந்துவிடும். மேலும் வைத்தியர்களுக்கு மாத்திரமே புரிந்துகொள்ளக்கூடியதாக அமைந்து சாதாரண பொதுமக்களுக்குப் பயன்படாது என்ற காரணத்தினால் மிகவும் முக்கியமான பொதுவான தேவையை மாத்திரம் தெரிந்து முக்கிய குறிப்புகளை மாத்திரம் இங்கு தருகிறேன்.

இது இதயத்தில் ஏற்படும் ஒரு தாக்கமாகும். இது மயோகாடியனின் குருதித் தேவைக்கும் அதற்குக் கிடைக்கும் குருதியின் அளவுக்குமுள்ள அவசியமான சமநிலை அற்ற தன்மையால் ஏற்படும் மயோகாடியல் சிதைவாகும் (Myocardial necrosis)

முக்கியமான இதன் அறிகுறி நோவாகும். இதைவிட சுவாசிக்கமுடியாத சிரமம், வாந்தி, அதிக களைப்பு, மயக்கம் என்பவை பொதுவானதாகும். இந்த நோவானது மிகவும் அதிகமானதும் கூடிய நேரம் இருக்கக்கூடியதுமாகும். இந்த நோவானது இறுகப்பிடிக்கும் பாரமான நெஞ்சைச் சுருக்கும் தன்மையானது. நோயாளி வெளிறிய நிலையிலும் குருதி அமுக்கம் (Blood pressure) குறைந்த நிலையிலும் காணப்படுவார். மிகவும் தாங்கமுடியாத நோவும் நோயாளியின் முகபாவமும் வெளிறிய நிலையும் நோயின் அபாயகரமான நிலையை எடுத்துக் காட்டும். கடுமையான நோயாளிகளில் வாந்தி பொதுவாகக் காணப்படும்; அதே வேளை நோவை அகற்றுவதற்கு வழங்கப்பட்ட 'மோபின்' (Morphine) இன் விளைவாலும் வாந்தி ஏற்படலாம்.

மென்மையான தாக்கங்களின் போது (mild attack) அறிகுறிகள் குறைவாக இருக்கலாம். ஆனால் கடுமையான நோயாளிகளில் (Severe cases) வழமையாக வெளிறல், வியர்வை, சுவாசிக்க இயலாமை என்பது காணப்படும் (Pallor, sweating, breathlessness). இதயத்துடிப்பு வழமையாக அதிகரித்துக் காணப்படும். இந்தத் தாக்கத்திற்கு ஆளானபின்பு குருதியமுக்கம் பொதுவாக நோயில-

www.padippakam.com

இருந்து தாக்கத்திற்குட்பட்டாரின் (முதலில்) சாதாரணமாக இருக்கும். ஆனால் தற்காலிகமாக நோ, ஆவல் (Pain, anxiety என்பவற்றால் அதிகரித்துக்காணப்படலாம். இருதயமுடக்கமானது படிப்படியாக முதல் மூன்று அல்லது நான்கு நாட்களில் குறைவடையும்.

வைத்தியப் பகுதியில் மிக முக்கியமானது நோவை இல்லாமல் செய்தல் (Relief of pain). மயோகாடியல் இன்'ஃபாக்ஷன்' ஆனது உடனடி வைத்திய சேவையை வேண்டி நிற்கிறது.

இதன் தாக்கத்திற்கு ஆளானவர்கள் தங்கள் உடல் பெருப்பமடைவதைக் கட்டுப்படுத்தல் வேண்டும் (Control of obesity), ஒழுங்கான மென்மையான உடற்பயிற்சி, புகைத்தலை நிறுத்துதல் என்பது உயர்வாழ்வதை முன்னேற்றுவிக்கும்.

கிட்டத்தட்ட கால்பகுதியான சகல மயோகாடியல் இன்'ஃபாக்ஷன்' நோயாளிகளிலும் இறப்பு எய்பது வைத்திய கவனிப்பு இல்லாதவிடத்து சில நிமிடங்களில் நிகழ்கிறது. அரைவாசி இறப்பு அறிகுறிகள் தோன்றிய இரண்டு மணித்தியாலங்களுள் நிகழ்கிறது. மேலும் முக்கால்வாசி இருபத்திநாலு மணித்தியாலங்களில் இறப்பு நிகழ்கிறது. கிட்டத்தட்ட 40% ஆன பாதிக்கப்பட்ட நோயாளிகள் முதல் ஒருமாதத்தில் இறக்கின்றனர்.

உடன் தாக்கத்திலிருந்து மீண்ட நோயாளிகளில் 80% இற்கும் அதிகமானோர் மேலும் ஒருவருடத்திற்கு வாழ்கின்றனர். 75% ஆனோர் 5 வருடங்களுக்கும் 50% ஆனோர் பத்து வருடங்களுக்கும் 25% ஆனோர் இருபது வருடங்களுக்கும் வாழ்கின்றனர். இதனால் இந் நோயாளிகளை ஆறுதல் படுத்துதலே மிக அவசியமாகும்


படிப்பகம்

www.padippakam.com

படவிமர்சனம்

# மங்கை ஒரு கங்கை



பண்பட்ட பழைய நடிகை சரிதாவும் புதியவார்ப்பான நதியாவும் வக்கீல்களாக மிக... மிக... அழகாக மோதிக்கொள்கிறார்கள். நடிப்பில் கூடத்தான். படத்தின் கதை சற்று மாறுபட்டது. முடிவு எதிர்பாராதது. அந்த வகையில் பாராட்டப் படவேண்டிய ஒரு படம். ஆரம்பத்திலேயே சற்று வித்தியாசமான பாத்திரமாகத் தோன்றும் நதியா... இறுதியில் இப்படி சற்றும் எதிர்பாராத அளவுக்கு வித்தியாசமாக நடந்திருப்பதை என்னவோ ஜீரணிக்க முடியவில்லை. விஜயகாந்த் பல படங்களில் செய்திருப்பது போல் இங்கு இவர் சட்டத்தைத் தன் கையில் தூக்கிக்கொண்டார். அது சரி அந்த வில்லன் அவர்... பெயர்.... மன்னிக்கவும் சிவச்சந்திரன் அல்ல... ஆ... ரேண்சிங்... இல்லே.. இல்லே சரண்ராஜ் சும்மா சொல்லக் கூடாது உண்மையிலேயே தான் கிளப்புகிறார். யாரோ விட்ட இடத்தை... நிரப்ப வந்திருக்கிறார் போல் தெரிகிறது. இருந்த போதும் இவர் தனக்கென தனிப்பாணியை வகுத்துள்ளார். சிறந்த ஒரு வில்லன் நமது பட உலகிற்குக் கிடைத்துவிட்டார் என்ற திருப்தி ஏற்படுகிறது. மொத்தத்தில் படம்... சற்று வித்தியாசமானது.

அன்புள்ள ஆசிரியருக்கு ......

ஆவணித் 'தென்றல்' கண்டேன். அளவிலா ஆனந்தம் கொண்டேன். ஒவ்வொரு அம்சத்தையுமே பாராட்டாமல் இருக்க முடியவில்லை. திரு சங்கர் புஷ்பாவின் 'சமுதாயப் பரிசுகள்' 'நாங்கள் விதைத்தவை' எனும் இருசிறு கதைகளுமே தென்றல் எனும் குழந்தைக்கு அழகுக்கு அழகு சேர்த்துவிட்டன. எமது சமுதாயத்தில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகளை 'நாங்கள் விதைத்தவைகள்' மூலம் ஆசிரியர் நன்றாகப் படம் பிடித்துக் காட்டி விட்டார். தியாகேசின் 'எனக்காக ஒருத்தி காத்திருக்கிறாள்' தென்றலுக்கு மேலும் மெருகூட்டி விட்டது. 'நவீன வீரபாண்டிய கட்டப் பொம்மன்' ரசிகல்லாவின் கற்பனை வளம் வெகு ஜோர். மாயவனின் 'அம்மாவை நினைத்தால்' சிறுகதை அருமையிலும் அருமை. தியாகேசின் கைவண்ணம் மேலும் அதற்கு அழகு ஊட்டி விட்டது. எம் போன்ற பெண்களுக்கு இதைத் தவிர வேறு என்ன கதி. இதைப் போன்ற சிறுகதைகள் கவிதைகள் மூலம் 'தென்றல்' மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகிறோம்

தி. பபிதா
CLEVEN

விம்மிய பெருமையோடு, தண்ணிய தென்றலவன், பொன்னிற ஆண்டுவிழா நடத்திடக் கேட்டு மகிழ்ந்தேன். காலதாமதமாகிய என் நல் வாழ்த்துக்கள்; மன்னிக்கவும். பொருந்திய தலைப்போடு என் ஆக்கத்தை பிரசுரித்தமைக்கு நன்றி. வாசகர்களின் விமர்சனங்களையும் வாசித்து மகிழ்ந்தேன். தமிழ் ஈழத்திலும் தென்றலெனும் நங்கையவள் தவழ்ந்து வர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

சித்திரா. மணிவண்ணன்
BREMEN - 44

தென்றலின் பன்னிரெண்டாவது மலர் ஒரு சிறப்பு மலராக மலர்ந்து கண்டு பெரு மகிழ்ச்சியடைந்தேன். இம்மாதத் தென்றலை கையில் எடுத்ததும்... அம்மாடி என்ன கனம்? புத்தகம் மட்டுமல்ல அதில்

www.padippakam.com

இருந்த அம்சங்கள் கூட கனமாகத்தான் இருக்கின்றன. இதுவரை காலமும் தன் சோகக் கவிதைகளால் நெஞ்சங்களை நெகிழ வைத்த கவிஞர் திரு. சங்கர் புஷ்பா அவர்கள் இம்முறை தன்னுடைய சோகம் தோய்ந்த சிறுகதைகளால் நம் கண்களையும் கசிய வைத்து விட்டார். சோகத்தையும் சுவையாகச் சொல்வது இவருக்கு கைவந்த கலைபோலும். 'நாங்கள் விதைத்த விதை' சிறுகதையினை வெறும் கற்பனையாக எண்ணத் தோன்றவில்லை. எமது சமுதாயத்தில் பலகாலமாக நிகழ்ந்து வரும் அசிங்கம் ஒன்று இது. தன் கவிதைகளாலும் கதைகளாலும் வாசகர் நெஞ்சங்களை சோகத்தின் எல்லைக்கே கொண்டு சென்ற திரு சங்கர் புஷ்பா அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இவருடைய திறமைகளை எமக்கு அறியத் தந்த தென்றலுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்து ரசகுல்லாவின் கற்பனையில் மலர்ந்த 'நவீன வீரபாண்டிய கட்டப்பொம்மன்' நல்லதொரு நகைச்சுவை ஆக்கம். படிக்கும் ஒவ்வொரு தடவையும் புதுப்பொலிவுடன் நம்மை சிரிக்க வைக்கிறது இந்த ஆக்கம். 'அம்மாவை நினைத்தால்' 'சுதந்திரம் எங்கே' ஆகிய இரண்டு சிறுகதைகளும் மனதுக்கு நிறைவைத் தருகின்றன. 'சுதந்திரம் எங்கே?' சிறுகதை ஜேர்மனியில் அகதியாக தஞ்சம் அடைந்துள்ள ஒவ்வொரு ஆண்மகனுக்கும் ஏற்படும் அனுபவமே. இங்கு உழைக்க நினைத்து வேலை தேடித் திரியும் ஒரு இளைஞனுக்கு வரும் சோதனைகளை அப்பட்டமாக எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். பிரபஞ்சனின் புதுமைக் கருத்துக்கள் கொண்ட 'மறக்கப்பட வேண்டிய சில நியாயங்கள்' தொடர் கட்டுரையை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கிறோம். வழக்கமாக வரும் தொடர்கதைகள் இம்முறை இடம் பெறாதது ஒரு சிறு குறையே. ஆயினும் அடுத்த மலர் இக்குறையினை நீக்கிவிடும் என்று காத்திருக்கிறோம். கவிதைகள் அனைத்தும் ரசிக்கும்படி உள்ளன. மொத்தத்தில் இந்தச் சிறப்புமலர் ஒரு கதம்பமாக மலர்ந்து நம் நெஞ்சங்களில் நிறைந்துவிட்டது. இதேபோல் தொடர்ந்தும் தென்றல் நிறைவான அம்சங்களை வழங்கி எம்மை மகிழ வைக்கும் என்ற நம்பிக்கையோடு விடை பெறுகிறேன்.

R. பத்மினி. (GERSHEIM)

தென்றலின் ஓராண்டு நிறைவு விழாவில் என்னைப் பாராட்டி பரிசளித்தமைக்கு என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். சரித்திரம் படைத்த தென்றலின் வருகை தொடரவேண்டுமென விரும்புபவர்களுள் நானும் ஒருவன். நாங்கள் தாயகம் செல்லும்வரை ஐரோப்பிய நாடுகள் முழுவதும் 'தென்றல்' தமிழ் மணங்கமழ வீசுவதற்கு என்னலான உதவிகளைச் செய்வதற்குக் காத்திருக்கிறேன்.....

ஆண்டுமலரில் 51ம் பக்கத்தில் விமானம் - வான ஊர்தியில் சென்றதாக இடம்பெற்றுள்ளது. இது இங்கு வானவெளியென்று வந்திருக்கவேண்டும். அதுபோன்றே 52ம் பக்கத்தில் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான இராமாயணம் என எழுதப்பட்டுள்ளது அதுவும் தவறே. இதுபோன்ற தவறுகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பிழை கண்டுபிடித்து

www.padippakam.com

பெயர் வாங்கவென்றே பலர் கச்சைகட்டிக்கொண்டு அலைகிறார்கள். அவர்களின் வாய்க்குப் பூட்டுப் போடவேண்டுமல்லவா!

அம்பலவன் புவனேந்திரன்.
(Remeheid)

தென்றலின் தமிழ்ப் பணி மேற்கு ஜேர்மனியில் மட்டுமல்லாது தமிழ் ஈழத்திலும் தொடரவேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள். தென்றலின் பக்கங்களும் சிறப்பு மலர்போலக் கூடவேண்டும். திரு இந்துமகேஷின் 'துன்பங்கள் தொடரட்டும்' என்ற கவிதை சிறப்பு மலருக்கு மேலும் மெருகூட்டுகின்றது. துன்பங்கள் இல்லாத வாழ்வில் ஒரு சுவையில்லை என்பதற்கு அவரின் கவி ஒரு எடுத்துக்காட்டு. இதுபோல மேலும் மேலும் அவர் கைவண்ணம் தென்றலில் ஒளிவீச வேண்டுகிறேன். அதேபோல சங்கர், புஷ்பா, தியாகேசு, இளங்கீரன், நிரஞ்சன் மற்றும் மாயவன் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

S. ராமச்சந்திரன்
Monchengladbach-2

---

நாம் வாசகர்களை நேசிக்கிறோம். அவர்களின் புகழ்ச்சிக்கு மயங்கியல்ல. ஏனென்றால் புகழ்ச்சியென்பது ஒரு மாயப்பிசாசு. அவர்கள் எமக்களிக்கும் சன்மானத்துக்கல்ல. ஏனென்றால் தமிழும், கலையும் விலைமதிப்பற்றவை. நாம் அவர்களை நேசிப்பது அவர்கள் தமிழ்மீதும் கலை, கலாச்சாரங்களின் மீதும் கொண்டுள்ள ஆழமான பற்றுதல்களுக்காகவும், நியாயமெனக் கருதின் மனிதாபிமானத்துடன் புதுமைகளை வரவேற்கும் உயர்ந்த பண்பிற்காகவும்; உள்சுத்தியான அவர்களின் விமர்சனங்களுக்காகவும். இவையெல்லாம் எமது கற்பனைகளுக்கும் சஞ்சிகை வளர்ச்சிக்கும் கருவூலமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

"தென்றல்"

www.padippakam.com

# வாசகநேயர்களே

இச்சஞ்சிகையானது, எந்தவிதமான ஒரு தனிப்பட்ட ஈழத்தரசியல் இயக்கங்களுக்குச் சார்பற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும் அரசியலைப் பொறுத்தவரையில், உங்களுடைய தனிப்பட்ட, ஆனால் எந்தவொரு இயக்கத்தையும் சாடாதவகையில், உங்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வாய்ப்பை, 'நிச்சயம்' - "தென்றல்" வழங்கும்.

இச்சஞ்சிகையில் வெளியாகும் கதைகளில் வரும் எந்தவொரு கதாபாத்திரமும் - கற்பனையானவையே. அத்துடன் இதில் வெளிவரும் சகலவிதமான அம்சங்களையும் மறுபரிசீலனை செய்யவோ, அன்றித் திருத்தியமைக்கவோ ஆசிரியருக்கு அதிகாரம் உண்டு என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், "தென்றலுக்கான உங்களுடைய ஆக்கங்கள் யாவற்றையும் தபால்மூலம் நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி;

T. THARMACUMAR (KANNAN)

NEUSTADT STR - 123,

4330, MÜLHEIM/RUHR

WEST. GERMANY.

— x —

தொலைபேசி இல :- 0208 - 406881

- இதழாசிரியர், -
திருமதி. யாழினி தர்மகுமார்.
- வெளியீட்டாசிரியர் -
திரு. த. தர்மகுமார். (கண்ணன்)

படிப்பகம்

www.padippakam.com


# SEELAN VIDEO CENTRE

எம்மிடம்

PYRAMID, THOMSUN, HOMEVIDEO INDIA, FAMILYVIDEO, ORIGINAL VIDEO கசற்றுக்களும்,

அத்துடன்

PYRAMID, THOMSUN, ECHO, SANGGTHA ஓடியோ கசற்றுக்களும்,

இசைத் தட்டுக்களும்

உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

ADDRESS

T. SATHIYASEELAN,
ZIMMER-45,
SCHAFHOF STR-34,
8500 NÜRNBERG-10.
WEST GERMANY.
T.P.NO-0911/522370.


படிப்பகம்